# தமிழன்
THAMILAN தமிலன்

Follow us:

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 316 பிலவ வருடம், ஆவணி மாதம் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(31.08.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 21, 0115886187 - பக்கங்கள் 08

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper


## நக்கல் நமசிவாயம்






## இலங்கையின் தங்கமகன் தினேஷ் பிரியந்த ஹேரத்

சமித்த துலானுக்கு வெண்கலம் 08

# 32 கர்ப்பிணிகள் உயிரிழப்பு!

## கொரோனாவில் சிக்கிய மேலும் 900 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை

***யோ.தர்மராஜ்***

கொரோனா தொற்றினால் இதுவரை 32 கர்ப்பிணிகள் உயிரிழந்துள்ளதுடன், தற்போது 900 பேர்வரை வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருவதாக குடும்ப நல சுகாதாரப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சித்ரமாலி சில்வா தெரிவித்தார்.

அத்தோடு, கொரோனா தொற்று ஆரம்பித்த நாள் தொடக்கம் தற்போதுவரை 4 ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட கர்ப்பிணிகள்... 02

## காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் கவனயீர்ப்பு போராட்டம்!




***வன்னி செய்தியாளர்***

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் வருடாவருடம் ஓகஸ்ட் 30 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் நிலையில், இவ்வருடம் கொவிட்- 19 பரவல் காரணமாக விதிக்கப்பட்டுள்ள ஊரடங்கு நிலையால் முல்லைத்தீவில் தொடர்ச்சியாக நீதிகோரி போராட்டம் மேற்கொண்டுவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தத்தமது வீடுகளிலிருந்தபடியே அடையாள கவனயீர்ப்பு போராட்டத்தினை நேற்று மேற்கொண்டனர்.

ஒவ்வொரு வருடமும் காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் பொது இடங்களில் ஒன்றுகூடி பாரிய அளவில் கவனயீர்ப்பு போராட்டங்களை மேற்கொண்டு தமது அன்புக்குரியவர்களுக்கான நீதியை கோரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாத நிலையிலும், தமது வீடுகளில்... 02

## அசங்க எம்.பிக்கும் கொரோனா தொற்று



ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்னவிற்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவருடன் நெருங்கி பழகியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் கொவிட் வைரஸ் பரவ ஆரம்பித்த நாளிலிருந்து தற்போது வரை 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில், நாடாளுமன்ற உறுப்பினர்களான அமைச்சர் பந்துல குணவர்தன, ஜானக வக்கும்புர மற்றும் அசங்க நவரத்ன ஆகியோர் மாத்திரமே சிகிச்சைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மருந்து மாஃபியாக்களுக்கு அரசாங்கம் சலுகை

### சஜித் குற்றச்சாட்டு

அரசாங்கம் பி.சி.ஆர் மற்றும் அன்ரிஜன் பரிசோதனைக்கான அதிகபட்ச விலை அடங்கிய வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதன்படி, பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்வதற்கான அதிகபட்ச கட்டணம் 6,500 ரூபாவாகவும் ... 02

## நிவாரணம் வழங்குவதில் தோட்டத் தொழிலாளர்களுக்கு பாரபட்சம்

### உதயகுமார் எம்.பி சாடல்

கொரோனா தொற்று நோய் காலத்தில் வருமானம் இழந்து நிற்கும் நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு பதிலாக வழங்கி வந்த நிவாரணங்களை தட்டிப்பறிக்க அரசாங்கம் முயற்சித்து வருவதை காணமுடிகிறது. குறிப்பாக 5ஆயிரம் ரூபா நிவாரணத் தொகையை தற்போது 2ஆயிரம் ரூபாவாக குறைத்துள்ளனர். மேலும், இதுவரை 10ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொதி தனிமைப்படுத்தப்படும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிலையில், அதனையும் தனிமைப்படுத்தலில் உள்ள வருமானம் குறைந்த நபர்களுக்கு வழங்க தீர்மானித்துள்ளது. தனிமைப்படுத்தப்பட்டால் முழு வருமானமும் இருக்காது. 02

## கொவிட்டின் புதிய திரிபு தென் ஆபிரிக்காவில்

தென் ஆபிரிக்காவில் கொவிட் வைரஸின் புதிய பிறழ்வு இனங்காணப்பட்டுள்ளது.

இதுவரை அடையாளம் காணப்பட்டவற்றில் இது மிகவும் பலமான திரிபுடையது என 'த ஜெருசலேம் போஸ்ட்'... 02

## ஐ.நாவின் மேற்பார்வையில் தமிழர்களுக்கு நீதிவேண்டும்

### எம்.கே.சிவாஜிலிங்கம் கோரிக்கை

*நெல்லியடி நிருபர்*

இழைக்கப்பட்ட இனப்படுகொலை, போர்க் குற்றங்களுக்காக நீதி கிடைக்க, வடக்கு கிழக்கு மாகாணங்களிலே ஒரு பொதுசன வாக்கெடுப்பினை நடத்தி, தமிழ் மக்களுடைய தலைவிதியை சர்வதேச நாடுகள் ஐ.நாவினுடைய மேற்பார்வையிலேயே பெற்றுத்தர வேண்டும் என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினமான நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இன்றைய தினம் (30)... 02



**இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக மிலிந்த மொரகொட நேற்று பதவியேற்றுக் கொண்டார். நீண்டகாலம் இந்த பதவிக்கான வெற்றிடம் நிலவிவந்த நிலையில், இந்த நியமனம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

## எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கையில் இலங்கை குறித்து மட்டும் பேசுவது ஏன்?



### சர்வதேசத்தை சாடுகிறார் அமைச்சர் பீரிஸ்

***யோ.தர்மராஜ்***

இலங்கையினால் ஏனைய நாடுகளுக்கோ அல்லது வேறு எவருக்குமோ எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. எனினும் வருடந்தோறும் ஜெனீவாவில் இலங்கை பற்றி விமர்சித்து, பல்வேறு குற்றச்சாட்டுகளை... 02

## பேராயர் மெல்கம் ரஞ்சித்துடன் சந்திப்பை நடத்தவுள்ள பீரிஸ்

***யோ.தர்மராஜ்***

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் தமக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (30) செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கத்தோலிக்க தேவாலயங்களுடன் எமது அரசாங்கம் மிகவும் நட்புறவுடன் கொடுக்கல் வாங்கலை செய்கிறது. 02

## மு.க.ஸ்டாலின் - செந்தில் தொண்டமான் தொலைபேசி அழைப்பில் கலந்துரையாடல்!



தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான், தொலைப்பேசி ஊடாக உரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

தமிழகத்தில் மறுவாழ்வு மையங்களில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு புதிய குடியிருப்புகள், உட்கட்டமைப்பு வசதிகள், புலமைப்பரிசில், சுயதொழில் மற்றும் குடியுரிமை வழங்க... 02

## முதலமைச்சர் ஸ்டாலினின் அறிவிப்புக்கு சி.வி.விக்னேஸ்வரன் நன்றி தெரிவிப்பு



இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நன்மையளிக்கும் பல்வேறு திட்டங்களை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு சட்டப்பேரவையில், 110ஆவது விதியின் கீழான அறிக்கை ஒன்றின் மூலம் வெளியிட்டுள்ளமை மிக்க மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளித்துள்ளதாகவும் இதற்காக முதலமைச்சருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாக நீதியரசரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவ்வறிக்கையில்... 02

## ஒரு வாரத்தில் பதிவுசெய்யப்படாத 52 நெற்களஞ்சியசாலைகளுக்கு சீல்வைப்பு

நுகர்வோர் அதிகார சபையினரால் கடந்த ஒரு வாரத்தில் வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடத்திய சோதனையில் பதிவுசெய்யப்படாத 52 நெற்களஞ்சியசாலைகள் அடையாளம் காணப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 8ஆயிரம் மெட்றிக் தொன் நெல் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கம்பஹா மற்றும் சீதுவ பகுதிகளில் உள்ள மூன்று களஞ்சியசாலைகளில் 5,400 மெட்றிக் தொன் சீனி அடையாளம் காணப்பட்டு, அவற்றிற்கும் சீல் வைக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்துடன் விவாதித்து ஒரு வாரத்திற்குள் இந்த களஞ்சியசாலை உரிமையாளர்கள் மீது... 02

## நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அடையாளம் காணப்படாத 11 சடலங்கள்

### கொரோனா தொற்றில் உயிரிழந்தோர் என தகவல்

***டி.சந்ரு***

நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்த அடையாளங்காணப்படாத 11 பேரின் சடலங்கள் தகனம்செய்ய முடியாமல் தேங்கியிருப்பதாக மாவட்ட வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக நேற்று (30) காலை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே சுகாதார அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ, கொத்மலை, நுவரெலியா, வலப்பனை மற்றும் ஹங்குராங்கெத்த ஆகிய பிரதேசங்களில் இயங்கும் 13 பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில்... 02

## ரிஷாட் பதியுதீனின் மனைவி - மாமனாரின் பிணை கோரிக்கை மீண்டும் நிராகரிப்பு

டயகம சிறுமி ஹிஷாலினி தீ விபத்துக்குள்ளாகி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் மனைவி மற்றும் மாமனார் ஆகியோரின் பிணை கோரிக்கை நீதிமன்றினால் மீண்டும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இரண்டு முறை, சந்தேகநபர்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட பிணை கோரிக்கைகள் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், நேற்று (30) குறித்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில்,... 02

# SLT–MOBITEL சேவைகள் தொடர்பிலும் வெளிவந்த தவறான தகவல்கள் பற்றி அந்நிறுவனம் தெளிவுபடுத்தியுள்ளது

இலங்கை அரசாங்கத்தின் க்ளவுட் (LGC) சேர்வர் கட்டமைப்பை நிர்வகிப்பது மற்றும் தேசிய மருந்துப்பொருட்கள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு (NMRA) சேவைகளை வழங்குவது தொடர்பில் அண்மையில் வெளியாகியிருந்த தவறான ஊடக அறிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தலை வழங்க SLT-MOBITEL கவனம் செலுத்தியுள்ளது.

வெளியிடப்பட்ட சில ஊடக அறிக்கைகளில் மருந்துப் பொருட்கள் உருவாக்கம் மற்றும் இதர தொடர்புபட்ட உசாத்துணை ஆவணங்கள் அடங்கலான இரகசியத்தன்மை வாய்ந்த தகவல்கள் அடங்கிய NMRA தரவுகள், அதன் கட்டமைப்பிலிருந்து கடந்த மாதம் அழிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான தரவு-பக்அப் (data-backup) இல்லை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்த அறிக்கைகளில் 2018 ஆம் ஆண்டில் அதிகார சபையினால் மருந்துப் பொருட்களை பதிவு செய்வது மற்றும் புதுப்பித்தலுக்காக ஒன்லைன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் இலங்கை அரசாங்க க்ளவுட் (LGC) கட்டமைப்பில், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் (ICTA) அமைப்பின் மேற்பார்வையின் கீழ் இந்தத் தரவுகள் சேமிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தன.

குறித்த இலங்கை அரசாங்க க்ளவுட் (LGC) ஹோஸ்ட் சேவைகளை SLT-MOBITEL வழங்கவில்லை என்பதை உறுதியாக தெரிவிப்பதுடன், அதற்காக ஆதாரங்களைக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளது. முக்கியமாக, NMRA க்கு அவ்வாறான சேவையை வழங்கவில்லை என்பதுடன், எவ்விதமான NMRA தரவுகளும் SLT டேட்டா சென்ரரில் சேமிக்கப்படவில்லை என்பதையும் SLT-MOBITEL உறுதியாக தெரிவிக்கின்றது.

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில், நிறுவனத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை எந்த விதத்திலும் இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என்பதை அனைத்து இலங்கையர்களுக்கும் SLT-MOBITEL உறுதியாக தெரிவித்துக் கொள்வதுடன், தனது சகல செயற்பாடுகளிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை தொடர்ந்தும் பேணி வருகின்றது.

## கொவிட்டின்...

பத்திரிகையின் இணையப்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் தொற்று நோய்களுக்கான தேசிய கற்கை மற்றும் குவாசுலு நட்டால் ஆராய்ச்சி நிறுவகத்தின் ஆய்வில் புதிய பிறழ்வு தொடர்பில் கண்டறியப்பட்டுள்ளது . இந்த தொற்று வேகமாக பரவுவதுடன், இதற்கான தடுப்பூசியின் பெறுபேறு மந்தமாகவே உள்ளதாகவும் குறித்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. C.1.2 என புதிய பிறழ்வு விஞ்ஞான ரீதியில் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய திரிபு கடந்த மே மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புதிய கொவிட் திரிபானது இதுவரை இங்கிலாந்து, சீனா, கொங்கோ, மொரஷியஸ், நியூசிலாந்து, போர்த்துக்கல் மற்றும் சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் இனங்காணப்பட்டுள்ளதாக 'த ஜெருசலேம் போஸ்ட்' பத்திரிகையின் இணையப்பக்கத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

## நிவாரணம் வழங்குவதில்...

அதில் எப்படி வருமானம் குறைந்தவர்கள் என்று அடையாளம் காணுவர் என்று அரசாங்கம் தான் விளக்கமளிக்க வேண்டும் என உதயகுமார் எம்.பி கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த 2000 ரூபா நிவாரணம், சமூர்த்தி பெறுவோர், முதியோர் கொடுப்பனவு பெறுவோர், அரச ஊழியர்கள், ஓய்வுபெற்றவர்கள், விசேட தேவையுடையோர் ஆகியோர் அல்லாத வருமானம் குறைந்தவர்களுக்கு வழங்கப்படும் என்று சுற்றறிக்கை விடுத்துள்ளார்.

மேலும், தேயிலை தோட்டங்களில் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக வேலை செய்பவர்களும் நிவாரணம் பெற தகுதியற்றவர்கள் பட்டியலில் இணைக்கப்படுள்ளதாக கூறப்படுவதுடன், அன்றாடம் வருமானம் பெறும் தொழிலில் ஈடுபடுபவர்கள் குறைந்த வருமானம் பெறுவோர் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, பெருந்தோட்ட தொழிலாளர்கள் அன்றாடம் தொழில் செய்து வருமானம் பெறுபவர்கள் மட்டுமின்றி குறைந்த வருமானம் பெறுபவர்கள். கடந்த முறையும் தோட்டத் தொழிலாளர்களுக்கு 5000 ரூபா கொடுக்கவில்லை. தற்போது 2000 ரூபா நிவாரணமும் அவர்களுக்கு இல்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் ஏன் இந்த பாராபட்சம் காட்டுகிறது?

ஆகவே, வருமானம் குறைந்த குடும்பங்கள் வரிசையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களையும் இணைத்து அவர்களுக்கும் 2000 ரூபா நிவாரணம் அல்லது நிவாரணப் பொதி வழங்கவேண்டும் என கோரிக்கை விடுக்கிறோம்.

அத்துடன் 2000 ரூபா என்ற சிறிய தொகைக்கு ஏன் இவ்வளவு வரையறை மற்றும் கட்டுப்பாடுகளை விதித்து பாகுபாடு காட்டப்படுகிறது? அத்துடன், அத்தியாவசிய பொருட்களின் விலைகளை அதிகரித்துவிட்டு நிவாரணத் தொகையை குறைத்து வழங்கும் அரசாங்கம் இந்த உலகத்தில் தற்போது இந்நாட்டில் உள்ள அரசாங்கமாகத்தான் இருக்கவேண்டும். கொரோனா வைரஸ் தரும் வலியை விட இந்த அரசாங்கம் கொடுக்கும் வாழ்க்கைச் செலவு சுமையே மிகவும் வேதனையாக இருக்கிறது.

## 32 கர்ப்பிணிகள்..

கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று (30) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி வழங்கும் வாரம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது முடிவுறும் தருவாயிலுள்ளது. அதன்படி, கர்ப்பிணிகள் பெரும்பாலானோர் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள ஆர்வமாக கலந்துகொள்கின்றனர். அதன்படி, இதுவரை 75 வீதமான கர்ப்பிணிகள் தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டுள்ளனர். எனினும், தடுப்பூசிகள் பெற்றுக்கொள்ளாத கர்ப்பிணிகள் தயவு செய்து அருகிலுள்ள தடுப்பூகளை பெற்றுக்கொள்ளுங்கள்.

கர்ப்பிணிகள் கொவிட் தொற்றுக்குள்ளாகும் போது அதனால் பாதிப்புக்குள்ளாகுவது அதிகம். கொரோனாவினால் இதுவரை 32 கர்ப்பிணிகள் உயிரழந்துள்ளனர். ஆகவே, தற்போதைய நிலைமை ஆபதத்தானது என்பதால் முடிந்தவரை தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டு பாதுகாப்பை உறுதி செய்துக்கொள்ளுங்கள்.

இதேவேளை, இதுவரை வைத்தியசாலைகளில் 900 கர்ப்பிணிகள் சிகிச்சை பெற்றுவருகின்றனர். எனினும், கொரோனா ஆரம்பம் தொடக்கம் இதுவரை 4 ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட கர்ப்பிணிகள் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். கர்ப்பிணிகளிடையே கொரோனா பரவும் வேகம் அதிகரித்துள்ளது. இதனால், கொரோனா தொற்றுக்குள்ளானோர் இருக்கும் பகுதிகளுக்கு செல்வதை முற்றிலும் தவிர்துக்கொள்ளுங்கள்.

இதேவேளை, தங்களுடைய பகுதிகளில், வீடுகளில் கொரோனா தொற்றுக்குள்ளானோர் இருப்பின் அவர்களிடையே இருந்து முடிந்தவரை விலகியிருங்கள். அத்தோடு, முடிந்தவரை வீடுகளை விட்டு வெளியேறாதிருப்பது பொருத்தமானது. அத்தோடு, வீடுகளில் இருக்கும் போதும் முடிந்தவரை முகக்கவசங்களை அணிதல் மற்றும் அடிக்கடி கைகளை கழுவுதல் போன்ற சுகாதார விதிமுறைகளை கடைபிடிப்பது கட்டாயமாகும் – என்றார்.

## ஐ.நாவின் மேற்பார்வையில்...

உலக வலிந்து காணாமல் செய்யப்பட்டோருக்கான நாள். இலங்கை தீவை பொறுத்த வரையில் உலகிலே இன்றைக்கு வலிந்து காணாமல் செய்யப்பட்டோர் வரிசையில் இரண்டாம் இடத்தில் இருக்கிறது. இது எங்களுடைய போராட்டங்கள் தீவிரமடைந்த காலத்திலேயே, 1970 களில் ஒரு சிலராகவும் 1980 களில் ஒரு சில டசின் கணக்காகவும் காணப்பட்ட விடயங்கள் 1990 களில் இன்னும் தீவிரமடைந்து, நூற்றுக்கணக்கிலே சென்ற நிலையிலே, 2000 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆயிரக்கணக்கில் காணாமல் போகின்ற நிலைமை உருவாக்கப்பட்டு 2009 கொடிய போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் இதுவரை தமிழ் தரப்பில் இருந்து வலிந்து காணாமல் செய்யப்பட்டோரின் எண்ணிக்கை சுமார் 20 ஆயிரம் என ஐ.நா மனித உரிமை பேரவைக்கு கிடைத்த புகார்களின் அடிப்படையில் தெரிவிக்கின்றனர்.

இந்த எண்ணிக்கை இன்னும் சற்று அதிகமாக இருக்கலாம். போர் நடைபெற்று கொண்டிருந்த பொழுது பல இடங்களிலே வடக்கு - கிழக்கிலே 600 பேருக்கு மேற்பட்டோர் காணாமல் போயிருக்கிறார்கள். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிலே 30/1 என்ற தீர்மானத்தை 2015 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதலாம் திகதி நிறைவேற்றுவதற்கு இணை அனுசரணை வழங்கியதாக இலங்கை அரசு சொன்னாலும் அதன் பிறகு அவர்கள் பின் வாங்கினார்கள். இந்த சூழ்நிலையில் தான் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தங்களுடைய உறவுகளை தேடி வருடக் கணக்கில் அலைந்து கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு ஏறக்குறைய 2000 நாட்கள் வீதிகளில் இருந்து போராடி வருகிறார்கள். சர்வதேச ரீதியான விசாரணைகள் மூலம்தான் நீதி கிடைக்க முடியும். அதனை பெறுவதற்கு நாங்கள் முனைப்பு காட்டவேண்டும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் போர்க்குற்றவாளிகளை நிறுத்தாத வரை இதற்கான நீதிகிடைக்க வாய்ப்பில்லை. விசாரணைகள் மூலம் இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டு, கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

இழைக்கப்பட்ட இனப்படுகொலை, போர்க் குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்களுக்காக பரிகார நீதி வடக்கு கிழக்கு மாகாணங்களிலே ஒரு பொதுசன வாக்கெடுப்பினை நடத்தி தமிழ் மக்களுடைய தலைவிதியை சர்வதேச நாடுகள் ஐ.நாவினுடைய ஏற்பாட்டிலும் மேற்பார்வையிலும் செய்யப்படவேண்டும். இது தான் அரசியல் தீர்வுக்கான வழி. காணாமல் போகச் செய்யப்பட்ட அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அவர்களுடைய நீதியும், நிவாரணமும், இழப்பீடுகளும் வழங்கப்பட வேண்டும் என்ற நிலையை நோக்கி இந்த தினத்திலே உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

## முதலமைச்சர்...

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித் தருவது உட்பட பல்வேறு திட்டங்களையும் சலுகைகளையும் அவர்களுக்கு வழங்க இருக்கின்றார். அத்துடன், இலங்கைத் தமிழர் அகதிமுகாம் என்பது இனி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என அழைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளமை இலங்கை தமிழ் மக்களின் பால் அவர் கொண்டுள்ள பாசம், அரவணைப்பு ஆகியவற்றை காட்டுகின்றது. அத்துடன், முதலமைச்சரின் இந்த அறிவிப்பு "உங்களுக்கு நாங்கள் இருக்கின்றோம்" என்ற ஒரு செய்தியைச் சொல்லுவதாக அமைவதாகவும் நான் உணர்கின்றேன்.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிலையான ஒரு தீர்வினை காண்பதற்கு எதிர்வரும் காலங்களில் தமிழக முதலமைச்சர், காத்திரமான பல நடவடிக்கைகளை எடுப்பார் என்ற நம்பிக்கை இலங்கை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான ஆய்வுகள், உபாயங்கள் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு தமிழ் நாட்டின் புத்திஜீவிகள், கல்விமான்கள், செயற்பாட்டாளர்கள் ஆகியோரைக் கொண்ட கட்சிசாரா சிந்தனை மையம் ஒன்றை அரசாங்கத்தின் ஒரு நிறுவனமாக தமிழக முதலமைச்சர் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வேண்டுகோள் ஒன்றை பணிவுடன் முன்வைக்கின்றேன். அத்தகைய ஒரு நிறுவனத்தை அரசாங்கத்தின் ஒரு அங்கமாக ஏற்படுத்தும்போது எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்த நிறுவனம் நீடித்து நிலைத்து தமிழ்மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்குப் பெரும் பணியை ஆற்றமுடியும் என்பது எனது நம்பிக்கை.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சிக் காலம் தமிழ்நாட்டின் பொற்காலமாக அமையும் என்பதிலும் இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு விரைவில் பரிணமிக்கும் என்பதிலும் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. அதேபோல, உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் மக்களுக்கும் தமிழக முதலமைச்சரின் ஆட்சிக்காலம் பல்வேறு வழிகளிலும் ஆதாரமாக அமையும் என்பதிலும் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கின்றது.

## ஒரு வாரத்தில்...

சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சட்டநடவடிக்கையின் போது குற்றவாளிகளாக கண்டறியப்பட்டவர்களுக்கு ஆயிரம் ரூபா முதல் 10 ஆயிரம் ரூபா வரை அபராதம் விதிக்கப்படலாம். ஒரே நிறுவனத்தின் பல களஞ்சியசாலைகள் கண்டறியப்பட்டால் 10 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் ரூபா வரையிலான தண்டப்பணம் மற்றும் ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கப்படலாமென தெரிவிக்கப்பட்டள்ளது.

## நுவரெலியா மாவட்ட...

இருந்து நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்டு, அங்கு பரிசோதனை மூலம் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்களுக்கு இவ் வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த (28) ஆம் திகதி முதல் நேற்று (30) வரை 11 கொரோனா உயிரிழப்புகள் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் பதிவாகியுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தோரின் சடலங்கள் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இறந்தவர்களின் உடலை உறவினர்கள் அடையாளம் காணாது தகனம்செய்ய முடியாத நிலையிலுள்ளது.

காரணம் உயிரிழந்தவர் தொடர்பில், பிரதேச பொது சுகாதார பிரிவினருக்கு தெரிவித்து பின் அவர்கள் வீட்டாருக்கு அறிவிக்கின்ற போதிலும் உடலத்தை அடையாளம் காட்டுவதற்காக வீட்டார்கள் வைத்தியசாலைக்கு வருகைத் தந்து ஒத்துழைப்பு வழங்க தவறியதால் குறித்த 11 சடலங்கள் தகனம்செய்ய முடியாது தேங்கியுள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் இதுதொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளர் அடங்கிய குழுவினருடன் கலந்துரையாடப்பட்டு, பின் சடலங்களை தகனம் செய்வதற்கும், வீட்டார்களை வரவழைத்து சடலத்தை அடையாளம் காண்பிக்கவும் விசேட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இருப்பினும் ஒரு சடலத்தை முழுமையாக தகனம் செய்வதற்கு சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் பிடிப்பதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதையடுத்து இரவு நேரங்களிலும் சடலங்களை தகனம் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படுமென அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## காணாமல் ஆக்கப்பட்டோர்...

நீதிகோரிய வாசகங்களை தாங்கி நீதியின் குறியீடாக மெழுகுவர்த்தி ஒளி ஏற்றி நேற்றைய நாளை அடையாளப்படுத்தி சர்வதேச சமூகத்திடம் நீதிகோரி போராட்டம் மேற்கொண்டனர். நாங்கள் இலங்கை அரசை நம்பவில்லை சர்வதேச விசாரணையே வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் திரும்பி வருவது எப்போது?, உங்கள் இராணுவத்தை நம்பி கையளித்த பிள்ளைகள் எப்படி காணாமலாக்கப்பட்டார்கள்? கால அவகாசம் வேண்டாம் - முறையான நீதி விசாரணையே வேண்டும் போன்ற வசனங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கி நேற்று சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தினத்தை அடையாளப்படுத்தி கவனயீர்ப்பை மேற்கொண்டனர்.

## ரிஷாட் பதியுதீனின்...

நாடாளுமன்ற உறுப்பினரின் மனைவி மற்றும் மாமனார் ஆகியோருக்கு பிணை வழங்குமாறு, சந்தேகநபர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள், கொழும்பு மேலதிக நீதிவான் சஜிந்தா ஜயசூரடியவிடம் கோரியிருந்தனர்.

எனினும், கோரிக்கையை ஆராய்ந்த மேலதிக நீதிவான் பிணை கோரல் மனுவை நிராகரித்து, எதிர்வரும் செப்டெம்பர் 6 ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## மருந்து மாஃபியாக்களுக்கு...

அன்ரிஜன் பரிசோதனைக்கான அதிகபட்ச கட்டணமாக 2ஆயிரம் ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி அறிவிப்பின் மூலம் பி.சி.ஆர் மற்றும் அன்ரிஜன் பரிசோதனையிலுள்ள ஆபத்தான மாஃபியாவை உறுதிப்படுத்துகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பி.சி.ஆர் மற்றும் அன்ரிஜன் பரிசோதனைக்கான அதிகபட்ச விலை அடங்கிய வர்த்தமானி அறிவிப்பு தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கொரோனா பேரழிவின் மத்தியிலும் வணிக நண்பர்களுக்கு மேடை அமைப்பதிலும் இந்த அரசாங்கம் முக்கிய பங்கு வகிக்கின்றமை இதன்மூலம் தெளிவாகிறது.

80 ரூபா அளவில் உள்ள விரைவான அன்ரிஜன் கருவிக்கு தனியார் மருத்துவமனைகளால் 2000-2500 ரூபாவரை கட்டணம் அறவிடப்படுகின்றது. உண்மையில் அன்ரிஜன் பரிசோதனை 600 ரூபாவிற்கும் பி.சி.ஆர் பரிசோதனை 2000 ரூபாவிற்கும் மேற்கொள்ள முடியுமாகவுள்ளது.

வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு முற்றிலும் முட்டாள்தனமானதோடு சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு, தற்போதுள்ள மருந்து வர்த்தக மாஃபியா நியாயமானது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு அன்ரிஜன் கருவிகளை இறக்குமதி செய்து பொதுமக்களுக்கு மானிய விலையில் வழங்க அரசாங்கத்திற்கு ஒரு தவிர்க்க முடியாத பொறுப்பு இருந்தாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிறுவனம் மருந்து ஏகபோகத்தை பராமரிக்க அனுமதித்து, அந்தக் கூட்டுத்தாபனம், அந்த பொறுப்பிலிருந்து கைகளைத் துடைத்துள்ளது.

இந்த முக்கியமான தருணத்தில், ஒரு கொடூரமான மற்றும் பீடனை தருணத்தில் மருந்து மோசடி நாட்டில் பரவலாக உள்ளதோடு அரசாங்கம் அதன் கூட்டாளிகளுக்கு மற்றொரு சலுகையை வழங்குவதால் அதை உன்னிப்பாக கண்டும் காணாததும் போல் பார்த்துக்கொண்டிருக்கிறது.

கொரோனா பேரழிவை அடுத்து உயிருக்கும் மரணத்திற்கும் இடையே போராடும் அப்பாவி மக்களின் உயிர்களை இழந்து கொண்டிருக்கும் இத்தகைய நிலையில், பழங்குடி பாணியிலான மாஃபியாக்களை உருவாக்க அனுமதிக்கும் அரசாங்கம் மக்களால் அவமானப்படுத்தப்பட்டுள்ளதோடு, இது போன்ற கேவலமான குற்றங்கள் நடக்க அனுமதிக்கப்படுவதை நாங்கள் வெறுக்கிறோம் என்பதோடு எதிர்ப்பையும் தெரிவிக்கிறோம்.

தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தரவுத்தளத்தை அழிப்பது தற்செயலானது அல்ல. தற்போதுள்ள இந்த மருந்து மாஃபியா மற்றும் தொடர்புடைய ஏகபோக நிறுவன செயல்முறைக்கு, மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபை இடையே ஒரு சதி உள்ளது என்பதை மறுக்கமுடியாது. மற்றும் அது குறித்து உடனடியாக பாரபட்சமின்றி விசாரிக்கப்பட வேண்டும்.

தற்போதைய பி.சி.ஆர் மற்றும் விரைவான அன்ரிஜன் பரிசோதனைக்கான அதிகபட்ச விலை அடங்கிய வர்த்தமானி அறிவிப்பை அரசாங்கம் உடனடியாக திருத்தவேண்டும் என்பதோடு, அன்ரிஜன் சோதனைக்கு 600 ரூபாவும் பி.சி.ஆர் சோதனைக்கு 2000 ரூபாவுமாக வரம்புக்கு உட்பட்ட வர்த்தமானி அறிவிப்பை வெளியிட வேண்டும்.

## பேராயர் மெல்கம்...

ஈஸ்டர் தாக்குதலானது அண்மைய காலத்தினுள் இடம்பெற்ற வேதனைக்குரிய சம்பவமாகவே பார்க்கின்றோம். கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்ஜித் ஆண்டகையை சந்தித்து இதுபற்றி கலந்துரையாடுவதற்கான சந்திப்பொன்றிற்கான கோரிக்கையை அவரிடம் முன்வைத்திருக்கின்றேன். ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் அரசாங்கம் எடுத்த அனைத்து நடவடிக்கை பற்றியும் தெளிவுபடுத்தவே இந்த சந்திப்பிற்கான கோரிக்கையை முன்வைத்துள்ளேன்.

மிகவும் சாதகமான பதிலை கர்தினால் வழங்கியுள்ளார். கர்தினால் ஆண்டகையின் அலுவலகம், மிகவிரைவில் இந்த சந்திப்பிற்கான சந்தர்ப்பத்தை அளிப்பதாக பதிலளித்துள்ளது. விசேடமாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றப்பத்திரிகை, சந்தேக நபர்கள், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்துஅவரை தெளிவுபடுத்துவதே எனது இந்த சந்திப்பிற்கான நோக்கமாகும்.

சட்டமா அதிபர் திணைக்களம் மட்டுமன்றி பொலிஸார், குற்றப் புலனாய்வுப்பிரிவு, புலனாய்வுப்பிரிவு, பயங்கரவாத தடுப்புப் பிரிவு அனைத்து திணைக்களங்களும் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி ஆண்டகைக்குத் தெளிவுபடுத்துவதற்கே வெளிவிவகார அமைச்சராக நான் முயற்சிக்கின்றேன். இந்த விடயம் பற்றி அரசாங்கத்திற்கு மிகவும் தெளிவான நோக்கு உள்ளது.

அண்மையில் வெளியாகிய அறிவிப்புகள், பல்வேறு போராட்டங்கள் அனைத்திற்கும் அடித்தளமான காரணங்கள் பற்றி நாம் புரிந்துக் கொள்கின்றோம். குறிப்பாக, பொறுத்துக் கொள்ள முடியாத வேதனை, கவலை மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி என்பனவே இதற்கான காரணமாகும். எனினும் சில நபர்கள் மாறுபட்ட நோக்கத்திற்காக கத்தோலிக்க தேவாயங்களைத் திசைத்திருப்புவதற்கு முயற்சிக்கின்றார்கள் என்பதற்கான தெளிவான ஆதாரங்கள் உள்ளன.

குறிப்பாக, சம்பந்தமில்லாத பிரிவுகள் இதில் தலையிடுகின்றன. சர்வதேச அரங்கிலிருந்து அவர்கள் செயற்படுத்தப்படுகின்றனர். அரசாங்கத்தை கஷ்டத்திற்கு உள்ளாக்கச் செய்வதல்ல, நாட்டின் பொருளாதாரத்திற்குப் பாரிய தாக்கத்தைஏற்படுத்துவதே அவர்களின் நோக்கம். எனினும் இந்த நோக்கம் இடம்பெற நாம் இடமளிக்க மாட்டோம். குறுக்கு வழியாக முயற்சிக்கின்றவர்களின் முயற்சியும் வெற்றியளிக்காது. இதுகுறித்து அனைத்து விடயங்களையும் சர்வதேசத்திடம் முன்வைப்பதற்காக நாம் முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் - என்றார்.

## எவ்வளவோ பிரச்சினைகள்...

முன்வைத்து வருகின்றமையிட்டு அதிர்ச்சியடைகின்றோம். எனவே, பேசவேண்டிய பல பிரச்சினைகள் உள்ள நிலையிலும் எமது நாட்டை தெரிவு செய்து ஏன் இவ்வாறு பேசுகின்றார்கள் என்கின்ற கேள்வியை ஜெனீவாகூட்டத் தொடரில் கேட்க நினைப்பதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (30) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் செப்டெம்பர் 12 ஆம் திகதி ஐ.நா மனித உரிமைப் பேரவை ஜெனீவா நகரில் கூடுகின்றது. செப்டெம்பர் 21 ஆம் திகதி ஐ.நா பொதுச் சபைக் கூட்டம் நியூயோர்க் நகரில் கூடுகின்றது. இவ்விரண்டு மாநாடுகளிலும் நாம் எமது நாட்டிற்கான அனைத்து பயனையும் பெற எதிர்பார்க்கின்றோம்.

எமது நிலைப்பாடு பற்றி விலாவாரியாக நாம் தெளிவுபடுத்தியிருக்கின்றோம். அந்த நாடுகளிலுள்ள இலங்கையின் தூதுவர்களான மொஹான் பீரிஸ் மற்றும் சி.ஏ சந்திரபிரேம ஆகியோர் மூலமாக இந்தத் தெளிவுபடுத்தலை செய்துள்ளோம். அத்தோடு, கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதவர்களை தனித்தனியாக சந்தித்து ஜெனீவா கூட்டத்தொடருக்குத் தொடர்புடைய விடயங்களையும், தெளிவுபடுத்தலையும் வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் நான் செய்துள்ளேன்.

இன்று உலகின் நிலைமை பற்றி நாம் சிந்தித்தால், குறிப்பாக தெற்காசிய வலயத்தில் பல்வேறு நெருக்கடிகள் உள்ளன. இந்த நிலைமை ஊடாக உலக மக்களுக்கு மேலதிகமான பாரதூரப் பிரச்சினைகளும் தலைதூக்குகின்றன. மனிதப்படுகொலை, குண்டுவெடிப்புகள், நிலையற்ற தன்மை, துப்பாக்கி மற்றும் ஆயுதப் பிரச்சினைகள், அகதிகள், தீவிரவாதம் என பிரச்சினைகளும் இந்த வலயத்தில் அண்மையில் இடம்பெற்ற சில சம்பவங்களினால் ஏற்பட்டுள்ளன.

இலங்கை என்பது அனைத்து நாடுகளுடனும் சிறந்த தொடர்வை வைத்துக்கொண்டு அமைதியாக இருக்கின்ற நாடாகும். எமது நாட்டினால் ஏனைய நாடுகளுக்கோ, எவருக்கும் எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. எனினும் ஒவ்வொரு வருடமாக ஜெனீவா நகரில் இலங்கை பற்றி விமர்சித்து, பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றமையிட்டு அதிர்ச்சியடைகின்றோம்.

இதற்கு உண்மையான காரணம் என்ன என்கின்ற பிரச்சனை எழுகின்றது. இதில் நீதி உள்ளதா? பேச்சு நடத்த பல பிரச்சினைகள் உள்ள நிலையிலும் இலங்கையை தெரிவுசெய்து ஏன் இவ்வாறு பேச்சு நடத்துகின்றார்கள் என்கின்ற கேள்வியை நாம் ஜெனீவாக் கூட்டத் தொடரில் கேட்க வேண்டும் என நினைக்கின்றேன். உண்மையில் இது மனித உரிமைகளுடன் சம்பந்தப்பட்டதா அல்லது அதற்கு அப்பாலான அரசியல் நிகழ்ச்சி நிரலா? என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா தொற்றின் கடுமையான நெருக்கடியை இலங்கை சந்தித்தது. எனினும், அனைத்து துறைகளிலும் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்த அரசாங்கத்தினால் முடிந்தது. எனவே எமது மக்கள் இந்த நிலைமையில் பாதுகாத்து முன்நோக்கிப் பயணிக்கச் செய்வதற்கு நாம் எடுக்கின்ற இந்த முயற்சிகளுக்கு உதவியளிக்கும்படி அனைத்து நாடுகளிடமும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

## மு.க.ஸ்டாலின்...

நடவடிக்கை எடுத்தல் போன்ற நலன்புரி திட்டங்களை முன்னெடுத்தமைக்கு இலங்கை மக்கள் சார்பாக தனது நன்றியை இந்த உரையாடலின் போது செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையில் உள்ள மலையக மக்களின் நலன்புரி விடயங்கள் தொடர்பாகவும் செந்தில் தொண்டமான் மு.க.ஸ்டாலினுடன் கலந்துரையாடியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்

நாள்: 31.08.2021 செவ்வாய்க்கிழமை – ஆவணி 15

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

| நட்சத்திரம்: மிருகசீரிடம் | திதி: அமர பட்ச நவமி | முற்கரணம்: தைதுலம் |
|---|---|---|
| காலை 9.44 - 01.09.2021 பிற்பகல் 12.34 வரை | அதிகாலை 2.00 - 01.09.2021 அ.கா. 4.23 | அ.கா 2.00 - பி.ப 3.14 |
| யோகம்: வஜ்ரம் | அமர பட்ச தசமி | பிற்கரணம்: கரஜம் |
| காலை 8.48 - 01.08.2021 காலை 9.39 வரை | 01.09.2021 அ.கா 4.23- 02.09.2021 காலை 6.22 | பி.ப3.14 - 01.09.2021 அதிகாலை 4.23 வரை |

**சுப நேரங்கள்**
காலை10.42 -பி.ப 12.11
பிற்பகல் 12.12 - 1.44

**அசுப நேரங்கள்**
ராகு காலம்
மாலை 3.15 - 4.47
குளிகை காலம்
எமகண்ட காலம்
காலை 9.09 - 10.41
துர் முகூர்த்தம்
காலை 8.30 - 9.19
இரவு 10.59 - 11.47

லோக நாயகி ஸஹஸ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேடம்** கடனில் ஒரு சிறிய தொகை செலுத்தினால் கடன்கள் குறைய துவங்கும். வாகனங்களை அவதானமாக கையாள்வது நன்மை. தம்பதியரிடையே அன்பு பெருகும்.

**ரிஷபம்** வணிக எண்ணங்கள் சிறப்புறும். சுப வேலைகளும், இல்லத்தில் மகிழ்ச்சியான சூழலும் உண்டாகும்.

**மிதுனம்** உடல்நலத்தில் அதிக கவனம் தேவைப்படலாம். புதிய வேலைகள் இன்று துவங்குவது சிறப்பைத் தராது. வீட்டில் வயதில் மூத்தவர்களிடம் பிரச்சினைகள் வேண்டாம்.

**கடகம்** பிள்ளைகளின் திருமண விடயங்கள் நடைபெற துவங்கும்.பாரிய இயந்திரங்கள் உள்ள தொழில் வருவாய் மேம்படும். மனைவியின் ஒத்துழைப்பால் தொழில் நன்மை பெறும்.

**சிம்மம்** உடல்நலத்தில் இறையருளால் நன்மை கிடைக்கலாம். திறமையை வெளிக்கொண்டு வரும் சாதகமான நிலை தோன்றும். குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக இருக்கும் நிலைமை ஏற்படலாம்.

**கன்னி** பணிகளில் திறன் மேம்படும். காதலர்களுக்கு இனிமையான நாளாக அமையலாம். நட்பில் புதியவர்களும் கிடைக்கப் பெறலாம்.

**துலாம்** பிள்ளைகளின் விடயங்களில் சிறிய கவனம் தேவைப்படலாம். சிறுகாயங்கள் ஏற்படலாம். அவதானம் தேவை. வீட்டின் பிரச்சினைகள் கவலை தரலாம். இறைவணக்கம் நன்மை தரும். சந்திராஷ்டமம்: விசாகம் நட்சத்திரம் பாதம் 1/2/3இற்கு அதிகாலை 2.59 - இரவு 11.12 வரை

**விருச்சிகம்** கடந்த கால வேலைத்திட்டங்களில் வருவாய் கிடைக்கலாம். சில கற்கைகளும் ஏற்படலாம். சில பிரச்சினைகள் நீங்கத் துவங்கும். சந்திராஷ்டமம்: விசாகம் நட்சத்திரம் பாதம் 4இற்கு இரவு 11.12 - 01.09.2021 அதிகாலை 5.54 வரை

**தனுசு** புதிய தொழில் தொடங்குவதற்கான நல்ல நாளாக அமையலாம். வருவாயுடன் செலவுகளும் ஏற்படும். பங்குதாரர்களின் வர்த்தகத்தில் பங்குதாரர் எண்ணிக்கை அதிகரிக்கலாம்.

**மகரம்** சகோதரர்களின் ஆதரவு பெருகும். பிள்ளைகளின் விடயங்களில் அவதானம் தேவைப்படலாம். பிறரின் பிரச்சினைகளில் தலையீடு தவிர்ப்பது நன்மை.

**கும்பம்** வணிகத்தில் புதிய மாற்றங்களை தவிர்ப்பது நல்லது. வேலைத்தளங்களில் அதிக பணிகளும், மாற்றங்களும் ஏற்படலாம்.

**மீனம்** பணியிடங்களில் நன்மைகளும், திறமைகளுக்கு பாராட்டுகளும் கிடைக்கப் பெறலாம். வணிக பங்குதாரர்களின் உதவிகள் கிடைக்கப் பெறலாம். செலவுகளில் கவனம் தேவை.

# வாள்வெட்டில் உயிரிழந்த இளைஞனின் அஸ்திக்கு குருநகரில் இறுதிக்கிரியை

## ஊரடங்கையும் மீறி மாபெரும் ஊர்வலம்

## இறந்தவர் மீதான பரிசோதனையில் தொற்று உறுதி



யாழ்ப்பாணம், குருநகரில் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இளைஞனின் அஸ்திக்கு இறுதிக்கிரியை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது, பெருமளவானவர்கள் ஊர்வலமாக சென்று இறுதிக்கிரியைகள் நடந்தன. பாடை கட்டி, நிலப்பாவாடை விரிக்கப்பட்டு ஊர்வலம் சென்றது. உயிரிழந்த இளைஞனை தற்காப்பு கலை மன்னன் புரூஸ்லியாக சித்தரிக்கும் சுவரொட்டிகள் குருநகரின் அநேக பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்தன.

குருநகர் திருச்சிலுவை சுகநல நிலையத்திற்கு அண்மையில் கடந்த 22ஆம் திகதி நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் எட்மண்ட் ஜெரன்ஸ் (வயது 24) என்ற இளைஞன் படுகாயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி கடந்த 24ஆம் திகதி உயிரிழந்தார்.

குருநகர்- பாஷையூர் குழுக்களுக்கிடையிலான வரலாற்று சிறப்பு வாய்ந்த நீண்டகால மோதலின் எதிரொலியாக இந்தச் சம்பவம் நடந்தது. பாஷையூரைச் சேர்ந்த கெமி குழு என்ற குற்றக் கும்பலினால் திட்டமிட்டு இந்தக் கொலை நடத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படுகிறது.

உயிரிழந்த இளைஞனுக்கு மேற்கொள்ளப்பட்ட 2 பி.சி.ஆர். பரிசோதனைகளிலும் கொரோனா தொற்று உறுதியானதையடுத்து கடந்த சனிக்கிழமை 28ஆம் திகதி சடலம் தகனம் செய்யப்பட்டது.

இளைஞனின் அஸ்தி பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டு நேற்று முன்தினம் இளைஞனின் அஸ்திக்கு இறுதிக் கிரியைகள் செய்யப்பட்டன.

இளைஞன் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கிராமத்தில் உருவான கொந்தளிப்பான நிலைமையை கருத்திற்கொண்டு, நிலைமையை சுமுகமாக்கிய பொலிஸார், சிறிய எண்ணிக்கையானவர்களுடன் இறுதிச்சடங்கை செய்ய அனுமதித்தனர். எனினும், அதை கணக்கிற்கொள்ளாமல் ஏராளமானவர்கள் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டனர். இறுதிச்சடங்கில் அசம்பாவிதங்கள் நடக்காமலிருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பாடை கட்டி, வெடி கொளுத்தி, நில பாவாடை விரித்து, மேளங்களுடன் இளைஞனின் அஸ்தியை வீட்டிலிருந்து கொட்டடி மயானத்திற்கு கொண்டுசென்றனர். புரூஸ்லீயின் படத்துடன் இணைக்கப்பட்ட இளைஞனின் படங்களும் குருநகரில் பரவலாக ஒட்டப்பட்டிருந்தன. அஸ்தி அடக்கம் செய்யப்பட்ட பின்னர், புறாக்களும் பறக்கவிடப்பட்டன.

# கினிகத்தேனையில் இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பம்



கினிகத்தேனை நகரைச் சூழவுள்ள கிராமங்கள் மற்றும் தோட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன.

கினிகத்தேனை மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இந்தத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் காலை முதல் இடம்பெற்றன.

முதலாம் கட்ட தடுப்பூசிகளை ஏற்றுக்கொண்டவர்களுக்கே இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மக்கள் இரண்டாம் கட்ட தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்காக நீண்ட நேரமாக வரிசையில் காத்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

# வவுனியாவில் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கிவைப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா பிரதேச செயலக பிரிவுட்பட்ட பகுதிகளில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தின் நிவாரணமாக 2000 ரூபா பணம் வழங்கப்பட்டு வருகின்றது.

ஊரடங்கால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக வவுனியாவில் 17 ஆயிரத்து 270 குடும்பங்கள் தகுதி பெற்றுள்ளன. அதற்காக 16 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் முதற்கட்டமாக 8 ஆயிரம் குடும்பங்களுக்கு அந்த நிதியை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக வவுனியா, உக்குளாங்குளம், பண்டாரிக்குளம் மற்றும் ரகுபாக்கம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பண்டாரிக்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 350 குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அப்பகுதி கிராம அலுவலரால் வழங்கப்பட்டது.

அத்துடன், வைரவபுளியங்குளம், இறம்பைக்குளம், வவுனியா நகரம் உள்ளிட்ட பல்வேறு கிராம அலுவலர் பிரிவுகளிலும் குறித்த கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

# நிலைமையை சாதகமாக்கிக்கொண்டு சில எதிர்க்கட்சி எம்.பிக்கள் அரசியல் நாடகம் நடத்துகிறார்கள்

## பாரத் அருள்சாமி குற்றச்சாட்டு

கொரோனா தொற்றின் பரவல் அதிகரித்துள்ள நிலையில் அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு, சில எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் நாடகம் நடத்துவது வேதனையளிப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும் பிரஜாசக்தி அபிவிருத்தி செயல் திட்டத்தின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

மத்திய மாகாண கொவிட் - 19 கட்டுப்படுத்தும் குழுக் கூட்டம் நேற்று மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவின் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கண்டி மாவட்டத்தில் பதிவாகியுள்ள மரணங்களில் அறுபது வயதுக்கு மேற்பட்டோரின் இழப்பே அதிகமாக காணப்படுகிறது. இதுவரையில் 8 இலட்சத்து 32 ஆயிரத்து 527 முதலாம் கட்ட தடுப்பூசிகளும் 5 இலட்சத்து 19 ஆயிரம் 494 இரண்டாம் கட்ட தடுப்பூசிகளும் ஆக மொத்தமாக 13 இலட்சத்து 52 ஆயிரத்து 21 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தடுப்பூசிகள் செலுத்திக் கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்ட சுமார் 11 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் செப்டெம்பர் மாத நடுப்பகுதியில் வழங்கி முடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, நிலைமைகளைக் கருத்தில் கொண்டு மக்கள் மிக அவதானமாக செயல்படுமாறும் மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் முன்னின்று செயல்படுவோம் எனவும் தெரிவித்தார்.

மேலும் நாடு முழுவதும் பெருந்தோட்டப் பகுதிகளை முன்னிலைப்படுத்தி 800க்கும் அதிகமான பிரஜா சக்தி தன்னார்வ இளைஞர்கள் மற்றும் யுவதிகள் சேவையில் ஈடுபட்டு தடுப்பூசிகளை வழங்க சுகாதாரப் பிரிவினருக்கு உதவிகளை வழங்கி வருகின்றனர். அவர்களுக்கும் மக்கள் சார்பாக எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.







பழுதடைந்த நிலையில் இருந்த அம்பியூலன்ஸ் வண்டிகள் பலவற்றை திருத்தி அவற்றை சுகாதார அமைச்சிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. ஜோர்ஜ் ஸ்டூரூவட்ஸ் ஹெல்த் நிறுவனம் இதற்கான முழு செலவினையும் ஏற்றிருந்தது. அதன் தலைவர் திலித் ஜயவீர இந்த நடவடிக்கையை தனிப்பட்ட முறையில் கவனித்து அதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 4,31,519 | 50,752 | 3,71,992 | 4,612 | 8,775 |

# இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு!

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது. தேசிய வெசாக் தினத்தை முன்னிட்டு புத்தசாசன அமைச்சினால் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நான்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டு இராணுவத்தினரால் கட்டுமான வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் நடக்கவிருந்த தேசிய வெசாக் தினத்தன்று வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட இருந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா அசாதாரண நிலை காரணமாக நேற்றைய தினம் உடுவில் மற்றும் கீரிமலை பகுதிகளில் அமைக்கப்பட்ட வீடுகள் இரண்டு யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியால் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.



குறித்த வீடு கையளிக்கும் நிகழ்வில் யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கொடிதுவக்கு, பலாலி இராணுவ கட்டளைத் தலைமை இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# துறைவந்தியமேடு ஆற்றங்கரை வீதியில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட துறைவந்தியமேடு கிராமத்திற்குச் செல்லும் ஆற்றங்கரை வீதியில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் மண்டூர் பாலமுனை மருங்கையடிபூவல் கிராமத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்லத்துரை கிருஸ்ணமூர்த்தி (55வயது) என அடையாளங் காணப்பட்டுள்ளார்.

தனது வீட்டில் இருந்து துறைவந்தியமேட்டிற்கு நேற்று (30) அதிகாலை 4 மணியளவில் மாடு மேய்ப்பதற்காக வந்துள்ளார். கூலித்தொழிலாளியான உயிரிழந்த நபர் நெஞ்சுவலியால் மயக்கமடைந்த நிலையில், உயிரிழந்திருக்கலாம் எனத் தெரியவருகின்றது.

இச்சம்பவம் தொடர்பில் கல்முனைப் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன். சம்பவ இடத்திற்கு வருகைத்தந்த கல்முனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அநுராதபுரத்தில் 15 நெற் களஞ்சியசாலைகள் சுற்றிவளைப்பு

## 8 இலட்சம் கிலோ நுகர்வோர் அதிகாரசபையால் கைப்பற்றல்

(அநுராதபுரம் நிருபர்)

அநுராதபுர மாவட்டத்தில் நேற்று முன்தினம் நுகர்வோர் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 15 நெற் களஞ்சியசாலைகளில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த எட்டு இலட்சம் கிலோ நெல் மூடைகள் அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளதாக நேற்று நுகர்வோர் அதிகார சபையின் அநுராதபுர மாவட்ட பொறுப்பதிகாரி பீ.ஏ.சீ.பெரேரா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுகர்வோர் அதிகாரசபையில் பதிவு செய்யப்படாத களஞ்சியசாலைகள் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்களை கைது செய்யும் நோக்கில் மாவட்டத்தின் ராஜாங்கனை யாய 06, அங்கமுவ மற்றும் தமுத்தேகம ஆகிய பகுதிகளில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, 15 க்கும் அதிகமான களஞ்சியசாலைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் களஞ்சியசாலைகளில் பதுக்கிவைத்திருந்த எட்டு இலட்சம் கிலோவுக்கும் அதிகமான நெல் மூடைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு, நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்ட நெல் மூடைகள் அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கமைய நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேலும் அநுராதபுர மாவட்டத்தில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்படுமென நுகர்வோர் அதிகாரசபையின் அநுராதபுர மாவட்ட பொறுப்பதிகாரி பெரேரா தெரிவித்தார்.

# புத்தளம் மாவட்டத்தில் 82 பேருக்கு கொரோனா

(ஜூட் சமந்த)

புத்தளம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 82 பேருக்கு கொரோனா தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

அவர்களில் 17 பேர் சிலாபம் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டவர்கள் என்பதுடன், ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தில் இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, புத்தளம் பிரதேசத்தில் 30 பேருக்கு தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது. அவர்கள் புத்தளம், ஆணமடுவ, முந்தல் மற்றும் பல்லம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தொற்றுக்குள்ளாகியுள்ளனர். கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த கொரோனா நோயாளர்கள் 23 பேர் அடையாங் காணப்பட்டுள்ளனர். அவர்களில் நுரைச்சோலை பொலிஸ் பிரிவில் 13பேருக்கும் கற்பிட்டி பொலிஸ் பிரிவில் மேலும் 10 பேருக்கும் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

மாரவில பிரதேசத்தில் கொரோனா நோயாளர்கள் 08 பேரும் தங்கொட்டுவ பிரதேசத்தில் இருவரும் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் புத்தளம் மாவட்டத்தில் 10 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com/thaarticle@yahoo.com
2021, ஓகஸ்ட் 31ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# தலிபானும் அதன் ஆட்சியும்

மிக வேகமான படை விலகல் காரணமாக முடிவிற்கு வந்த 20 வருட யுத்தத்தைத் தொடர்ந்து ஆப்கானிலுள்ள பாதிக்கப்படக்கூடிய அமெரிக்கர்களையும் அந்த நாட்டவர்களையும் அங்கிருந்து வெளியேற்றுவதற்கான அவசர அவசரமான நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

எந்த புதிய தலிபான் அரசாங்கத்தையும் சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தக் கூடிய அதிகாரமும், சர்வதேச நிறுவனங்கள் தலிபான் அரசாங்கத்துடன் வர்த்தகத்தில் ஈடுபடுவதை தடுக்கக்கூடிய அதிகாரமும், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனிடம் உள்ளது.

அமெரிக்கா தலிபானுக்கு எதிரான தடைகளை தொடர்ந்தும் பேணுகின்றது. மேலும், தீவிரவாத அமைப்பு மீதான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் சீனா, ரஷ்யாவின் முயற்சிகளை தடுக்கக்கூடிய வீட்டோ அதிகாரமும் அமெரிக்காவிடம் உள்ளது. சர்வதேச நாணய நிதியமானது, தலிபான் ஆட்சியைப் பிடித்த அதே காலப்பகுதியில் ஆப்கானுக்கு வழங்கவிருந்த 500 மில்லியன் டொலரை வழங்குவதை தடுத்து நிறுத்தியுள்ளதை இங்கு கவனிக்க வேண்டும்.

படையினரை விலக்கிக்கொள்வதற்காக ஓகஸ்ட் 31ஆம் திகதி காலக்கெடுவை மீறவேண்டாம் என தலிபான் அமெரிக்காவுக்கு எச்சரித்து வரும் நிலையிலேயே இது இடம்பெறுகின்றது. தலிபான் சாதகமான வெளிநாட்டு உறவுகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக, சீனாவுடன் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். உலகில் வழமைக்கு மாறான சீனா - ஆப்கானிஸ்தான் இடையேயான ஒத்துழைப்பில் தலையிடும் நிலையில் அமெரிக்காவும் இல்லை என அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

பொருளாதார ரீதியிலும் மூலோபாய ரீதியிலும் ஆப்கானிஸ்தான் சீனாவுக்கு முக்கியமானது. சீனாவுக்கு எதிரான பயங்கரவாதத் தாக்குதலுக்கு திட்டமிடுவதை தலிபான் நிறுத்திக்கொள்ள வேண்டும் என சீனத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஆப்கானின் கனிம தொழில்துறையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பை சீனர்கள் எதிர்பார்க்கின்றனர். முதலீட்டுடனான உட்கட்டமைப்புத் திட்டங்கள் மூலம் இதனை சீனாவுக்கே கொண்டு செல்ல முடியும்.

2000ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் காபூலுக்கு அருகிலுள்ள மெஸ் அய்னாக்கில் அகழ்வில் ஈடுபடுவதற்கு சீன அரசாங்கத்தின் மெட்டர்லஜிகல் கோர்ப் நிறுவனம் 3 பில்லியன் டொலர் அனுமதியை பெற்றிருந்தது. பாதுகாப்பு கரிசனைகள் முதல் வரலாற்றுச் சின்னங்களை கண்டுபிடிப்பது போன்ற தடங்கல்கள் காரணமாக வெளியீடுகள் எவையும் கிடைக்கவில்லை

இலக்குவைக்கப்பட்ட படுகொலைகள், இனச்சிறுபான்மையினத்தவர்களின் படுகொலைகள், வன்முறையுடன் கூடிய ஆர்ப்பாட்ட ஒடுக்குமுறைகள், தலிபான்கள் உள்ளூர் பெண்களை திருமணம் செய்வதற்கு வேண்டுகோள் விடுத்தல் ஆகிய அனைத்தும் அங்கு இடம்பெறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவை அனைத்தும் சீனா - ஆப்கானிஸ்தான் உறவில் தாக்கம் செலுத்தக்கூடும்.

சீனாவுடன் இணைந்து பொருளாதாரத்தையும் வலுப்படுத்த தலிபான்கள் முயற்சிப்பார்கள். இப்போது அங்கு அமுலாகும் நிதி கட்டுப்பாடுகளை பார்க்கையில் அது புலனாகிறது. ஆப்கானிஸ்தானில் வங்கியிலிருந்து வாரத்திற்கு 200 டொலருக்கு மேல் பணமாக எடுக்க தடை விதித்து தலிபான்கள் கட்டுப்பாடு விதித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் ஆட்சியதிகாரத்தை தலிபான்கள் கைப்பற்றியதால், ஏற்கனவே தடுமாற்றத்திலிருந்த ஆப்கான் பொருளாதாரம் தற்போது பெரும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. இதனால் ஆப்கானில் அத்தியாவசிய பொருட்களின் விலை உச்சத்தை தொட்டுள்ளது. இச்சூழலை சமாளிக்க தலிபான்கள் சில நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர். அதன்படி, 'சென்ட்ரல் பேங்க் ஒவ் ஆப்கானிஸ்தான்' ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அதாவது, அனைத்து வங்கிகளிலும் மக்கள் ஒரு வாரத்திற்கு 200 டொலருக்கு மேல் (ஆப்கான் மதிப்பில் 2000 ஏ.எவ்.எஸ்.) வங்கியிலிருந்து பணமாக எடுக்க தடை விதித்துள்ளது. மேலும், பொருளாதாரம் மோசமான நிலைக்குச் சென்றுள்ளமை தற்காலிகமானது என்றும், விரைவில் நிலைமை சரியாகும் எனவும் தனியார் வங்கிகள் அனைத்தும் தங்கள் பணிகளை விரைவில் தொடங்க வேண்டும் என்றும் தலிபான் அரசு தெரிவித்துள்ளது.

அதேநேரத்தில், பணமாக எடுக்க மட்டுமே இப்போது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் தனியார் நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க டிஜிட்டல் முறையில் பணத்தை அனுப்பிக்கொள்ளலாம் என்றும் இதற்கு எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லைஎன்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. தலிபான்கள் காபூலைக் கைப்பற்றியதிலிருந்தே ஆப்கானில் வங்கிச் சேவைகள் முற்றிலுமாக முடங்கியமை குறிப்பிடத்தக்கது.

பொருளாதார வளர்ச்சிக்காக சீனாவை நம்பும் தலிபான்கள், இந்தியாவுடன் இராஜதந்திர உறவுகளை வைத்துக்கொள்ளவும் காய்நகர்த்தல்களை செய்கின்றனர். இந்தியா - ஆப்கானிஸ்தான் இடையிலான பொருளாதார, வர்த்தக மற்றும் அரசியல் உறவுகளை தொடர்ந்து பேண விரும்புவதாக தலிபான் இயக்கத்தின் மூத்த தலைவர் ஷேர் முகமது அப்பாஸ் ஸ்டானிக்சாய் தெரிவித்துள்ளார். ஆப்கானில் சுமார் 500 திட்டங்களை மேற்கொள்ள 3 பில்லியன் டொலரை (சுமார் ரூ.44,000 கோடி) இந்தியா முதலீடு செய்துள்ளது.

தெற்காசியாவில் இந்தியா முக்கியமான நாடாக உள்ளது. அந்நாட்டுடன் ஆப்கானுக்குள்ள அரசியல், பொருளாதாரம் மற்றும் வர்த்தக உறவுகளுக்கு தலிபான்கள் மிகுந்த முக்கியத்துவம் தருகிறோம். அவற்றை தொடர்ந்து பேண விரும்புகிறோம். இரு நாடுகளுக்கு இடையே வர்த்தக உறவை மேம்படுத்த நிர்மாணிக்கப்பட்ட வான் வழித்தடம் மீண்டும் திறக்கப்பட வேண்டும்.

பாகிஸ்தான் வழியாக இந்தியா - ஆப்கான் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வது மிக முக்கியம் என்று இருநாடுகளுக்கு இடையிலான உறவு குறித்து முகமது அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் உத்தரகாண்ட் டேராடூனிலுள்ள இந்திய இராணுவ அகடமியில் கடந்த 1980ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் வெளிநாட்டு இராணுவ வீரர் என்ற முறையில் ஷேர் முகமது அப்பாஸ் பயிற்சி பெற்றார். அவர் ஆப்கானிஸ்தான் இராணுவத்தில் இணைந்த நிலையில், பின் அந்தப் பணியிலிருந்து விலகி தலிபான்களுடன் இணைந்தமை குறிப்பிடத்தக்கது.

தலிபான்கள் விமர்சனத்துக்குரியவர்கள். அவர்களின் கடந்த காலங்கள் விமர்சனங்களுக்குரியவை. ஆனால், இப்போது ஆட்சியதிகாரத்தை அவர்கள் குறைந்தபட்ச ஜனநாயகத்துடனாவது செய்ய முயற்சிப்பதுதெரிகிறது. சீனாவையும் இந்தியாவையும் ரஷ்யாவையும் அரவணைத்து ஏன் அமெரிக்காவை கூட எதிர்காலத்தில் பொருளாதார உதவிகளுக்காக தலிபான்கள் அழைக்கக்கூடும். அவர்களின் எதிர்கால செயற்பாடுகள் இனி அவற்றை தீர்மானிக்கும்.

தமது மக்களை தாமே ஆட்சி செய்யவேண்டுமென்ற தலிபான்கள் நல்லாட்சி நடத்தினால் அது நல்லதுதானே? ஆனால், மேற்குலகமும் ஆயுத ரக முதலாளித்துவமும் அதற்கு அனுமதிக்குமா? காலம் பதில் சொல்ல வேண்டும்.







# ஆப்கானை விட்டு வெளியேறியது இங்கிலாந்து

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருந்த இங்கிலாந்து படை அணி அங்கிருந்து வெளியேறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 28ஆம் திகதி சனிக்கிழமை இரவு கடைசி விமானம் புறப்பட்டது. ஒப்பரேஷன் பிட்டிங்கின் ஒரு பகுதியாக இறுதி மீட்பு விமானம் இரவில் காபூலை விட்டு வெளியேறியதை பாதுகாப்பு அமைச்சு உறுதிசெய்தது. தற்கொலைத் தாக்குதல் அச்சுறுத்தலின் மத்தியில் படையினரின் வெளியேற்றம் நடந்தது. கடற்படையின் முன்னாள் ஊழியரான பென் ஃபார்த்திங் [வயது 57] ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறிய கடைசி பிரிட்டிஷ் பிரஜையாவார். விலங்கு மீட்பரான ஃபார்திக் 180 நாய், பூனைகளுடன் தனி விமானத்தில் புறப்பட்டார்.

இங்கிலாந்துக்கு செல்லத் தகுதியான சுமார் 150 பிரிட்டன் பிரஜைகளும், 1,000 ஆப்கானியர்களும் ஆப்கானிஸ்தானில் உள்ளனர். இங்கிலாந்து படைகள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறிவிட்டது. ஆனால், ஆப்கான் மக்களை நாம் கைவிட மாட்டோம் என ஆப்கானிஸ்தானுக்கான பிரிட்டிஷ் தூதர், சர் லாரி பிரிஸ்டோவ் கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்த செயற்பாட்டின் கட்டத்தை மூடுவதற்கான நேரம் வந்துவிட்டது, ஆனால், இன்னும் வெளியேறவேண்டிய மக்களை நாங்கள் மறக்கவில்லை. அவர்களுக்கு எங்களால் முடிந்த உதவிகளை தொடர்ந்து செய்வோம். ஆப்கானிஸ்தானின் துணிச்சலான - கண்ணியமான மக்களை நாம் மறக்கவில்லை. அவர்கள் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழத் தகுதியானவர்கள்" என்றார்.

சனிக்கிழமை இரவு 9.25 மணிக்கு புறப்பட்ட விமானம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒக்ஸ்போர்ட்ஷையரிலுள்ள பிரைஸ் நோர்தனைச் சென்றடைந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இது இங்கிலாந்தின் மிகப்பெரிய இராணுவ வெளியேற்றமாகும். படையினர் மிகக்குறைந்த உபகரணங்களுடன் பயணம் செய்தனர். கடைசி நாட்களில் உடை மாற்றுவதற்கு அவர்களுக்கு நேரமிருக்கவில்லை.

ஒப்பரேஷன் பிட்டிங்கின் கீழ், பதினைந்து நாட்களில் காபூலிலிருந்து 15,000 பேரை இங்கிலாந்து வெளியேற்றியது. 5,000 பிரிட்டிஷ் பிரஜைகள் மற்றும் 8,000இற்கும் அதிகமான ஆப்கானியர்கள் மற்றும் இங்கிலாந்து



மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக வேலை செய்தவர்களும் இவர்களில் அடங்குவர். ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறியவர்களில் சுமார் 2,200 குழந்தைகள் இருந்தனர், அவர்கள் இப்போது பாதுகாப்பாக உள்ளனர்.

ஆப்கானிஸ்தான் இடமாற்றங்கள் மற்றும் உதவிக் கொள்கையின் (ARAP) கீழ் சுமார் 10,000 பேர் இங்கிலாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இது இந்த ஆண்டு எதிர்பார்த்த எண்ணிக்கையை விட இரண்டு மடங்கு அதிகம்.

இங்கிலாந்து பிரஜைகள் அனைவரும் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறிய பின்னர்தான் நான் வெளியேறுவேன் எனக் கூறிய ஆப்கானிஸ்தானுக்கான பிரிட்டிஷ் தூதர் லாரி பிரிஸ்டோவும் பிரைஸ் நோர்தனில் இறங்கியவர்களில் ஒருவர். இங்கிலாந்தின் இராஜதந்திர, பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான ஈடுபாட்டை தொலைவிலிருந்து வழிநடத்த அவரும் அவரது தூதரகமும் தற்காலிகமாக கட்டாருக்கு இடமாற்றம் செய்யப்படும். ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு மற்றும் அரசியல் சூழ்நிலை என்பனவற்றின் மாறுபாட்டின் பின்னர் இராஜதந்திர இருப்பை மீண்டும் நிறுவ இருப்பதாக இங்கிலாந்து அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் இங்கிலாந்துக்கு உதவியவர்களை மீட்கும் பணி இலகுவானதாக இருக்கவில்லை. தலிபான்களின் வேட்டையிலிருந்து தப்புவதற்காக உயிரைக் கையில் பிடித்தபடி அவர்கள் உதவியை எதிர்பார்த்தார்கள். 2011 ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்து இராணுவத்துக்கு மொழிபெயர்ப்பாளராக மூன்று வருடங்கள் கடமையாற்றிய ஒருவர் தனது அனுபவத்தை ஊடகம் ஒன்றுடன் பகிர்ந்துள்ளார். அவரது பெயரை 'எஸ்' என அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.



தனது மனைவி, மூன்று மாத கைக்குழந்தை, மூன்று வயது மகனுடன் ஆறு நாட்கள் தூசியிலும் வெயிலிலும் காத்திருந்த 'எஸ்' விமானத்தைப் பிடிக்கும் நம்பிக்கையை விட்டுவிட்டார்.

அவரது உயிருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களின் உயிருக்கும் ஆபத்து இருந்தபோதிலும், அவர் உதவிக்கான தகுதியை நிரூபித்து தனது ஆவணங்களுடன் காபூலுக்கு பயணம் செய்தார்.

அவர்கள் பரோன் ஹோட்டலுக்கு வெளியே விமான நிலையத்தின் முன் காத்திருந்தனர். பிரிட்டனுக்கு செல்ல விரும்புபவர்களின் முக்கிய செயலாக்க மையம் அவ்விடத்தில் உள்ளது. ஆனால், யாரும் அவர்களை முன்னோக்கி அழைக்கவில்லை. ஒரு கட்டத்தில், அவரது மனைவி வெப்பத்தில் மயங்கி விழுந்தார், இவ்வளவு பெரிய, கணிக்க முடியாத கூட்டங்களுக்கு மத்தியில் தனது பெண் குழந்தையின் உயிருக்கு அவர் பயந்தார்.

புதன்கிழமை இரவு, விமான நிலையத்திற்கு உடனடி பயங்கரவாத அச்சுறுத்தல் இருப்பதாக இங்கிலாந்து எச்சரித்தது மற்றும் மக்களை விலகி இருக்குமாறு வலியுறுத்தியது. ஆனால், 'எஸ்' அவர் இருந்த இடத்திலேயே இருந்தார். அவருக்கு வேறு வழியில்லை என்றார். அவரது மனதில், தலிபான்கள் இஸ்லாமிய அரசைபோலவே அவருக்கு அச்சுறுத்தலாக இருந்தனர். அடுத்த நாள், பயங்கரவாத அச்சுறுத்தல் உண்மையாக மாறியது, தற்கொலைக் குண்டுதாரி கூட்டத்தில் சிதறி, டஜன் கணக்கான மக்களைக் கொன்றார்.

எஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் குண்டுவெடிப்பில் இருந்து காயமின்றி உயிர் தப்பினர். ஆனால் அவர்கள் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வெள்ளிக்கிழமை, சோர்வாகவும், பயமாகவும், தலைமறைவாகவும், எஸ் ஒரு அழைப்பு மையத்திற்கு ஒரு எண்ணை அனுப்பினார், இது இங்கிலாந்தால் அமைக்கப்பட்டது. ஆப்கானிஸ்தான் மொழிபெயர்ப்பாளர்களால் கையாளப்படுகிறது. அவர் உதவி கேட்டார், ஆனால், பதில் இல்லை.

மறுமுனையில் ஒரு குரல் அவரை விமானத்தில் அனுமதிக்கப் போகிறது என்பதால் விமான நிலையத்திற்கு தனது குடும்பத்துடன் டாக்ஸியைப் பிடிக்கச் சொன்னது. அவரும் அவரது மனைவியும் குழந்தைகளுடன் விமான நிலையத்தின் ஒரு முனைக்கு விரைந்தனர்.

சனிக்கிழமை அதிகாலை சுமார் ஒரு மணி. அவர்கள் டாக்ஸியை விட்டு சுமார் 20 நிமிடங்கள் நுழைவாயிலை நோக்கி நடந்தனர். அவரை அழைத்த நபர் - அவரும் அவரது குடும்பத்தினரும் எங்கு செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தினார். ஆனால், பெரிய கூட்டம் இருந்தது. அவர்களால் கடந்து செல்ல முடியவில்லை.

தொலைபேசி மீண்டும் ஒலித்தது, மறுமுனையில் இருந்த நபர் அவரை கூட்டத்திலிருந்து விலகிச் செல்லுமாறு அறிவுறுத்தினார், பின்னர் விமானநிலையத்தைச் சுற்றியுள்ள முள்வேலி வழியாக ஒளியுடன் சமிக்ஞை செய்தார். திடீரென்று பிரிட்டிஷ் வீரர்களும் அவர் பேசிக்கொண்டிருந்த மொழிபெயர்ப்பாளரும் தோன்றினர். அவர்கள் மூவரையும் கம்பியின் மேல் ஏற்றிச் சென்றனர்.

ஒரு காலத்தில் மிகவும் பரபரப்பாக இருந்த காபூல் விமான நிலையத்துக்குச் செல்லும் பாதைகள் இப்போது வெறிச்சோடியுள்ளன. தலிபான்கள் புதிய சோதனைச் சாவடிகளை அமைத்து பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர். ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற விரும்பும் பலரால் அங்கு செல்ல முடியவில்லை. எதிர்காலம் எப்படி இருக்குமோ என்ற அச்சம் பலரிடம் உள்ளது.

ரமணி

# எங்களின் எதிர்பார்ப்புகள் கண்துடைப்பாகிவிட்டன

## - வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளை நிரந்தரமாக இல்லாமல்செய்ய சர்வதேசம் செயற்படுவதாக மனுவல் உதயச்சந்திரா குற்றச்சாட்டு

(மன்னார் நகர் நிருபர்)

வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளை நிரந்தரமாக காணாமலாக்குவதற்கு சர்வதேசம் செயற்பட்டு வருகின்றது. நாங்கள் நீதிக்காக போராடிக்கொண்டிருக்கும் நிலையில், சர்வதேசம் எங்களை திரும்பிப் பார்க்காமல் இருக்கிறது - என மன்னார் மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவுகளைத் தேடும் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்ட தினத்தையொட்டி நேற்று மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளை நிரந்தரமாக காணாமலாக்குவதற்கு சர்வதேசம் செயற்பட்டு வருகின்றது. நாங்கள் நீதிக்காக போராடிக்கொண்டிருக்கும் நிலையில், சர்வதேசம் எங்களை திரும்பிப் பார்க்காமல் இருக்கிறது.

காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளுக்காக எத்தனையோ வருடங்களாக வீதிகளில் இறங்கி போராடியுள்ளோம். எங்களுக்குரிய நீதியும், தீர்வும் கிடைக்கும் என்றும் காணாமலாக்கப்பட்ட எமது பிள்ளைகள், உறவுகள் திரும்பி எம்மிடம் வருவார்கள் என்றும் எதிர்பார்த்திருந்தோம். ஆனால், இன்றுவரை ஒன்றுமே நடக்கவில்லை. இலங்கையில் சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினத்தையொட்டி கதைக்கின்றோம். இளைஞர்களைக் காணவில்லை, வயதானவர்களைக் காணவில்லை.

சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினத்தை ஒவ்வொரு வருடமும் நினைவுகூர்ந்து வருகிறோம். ஆனால், எவ்வித பிரயோசனமும் இல்லை. இந்த அரசாங்கத்திடமிருந்து சர்வதேசம் எங்களுக்கு ஒரு நீதியை பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையில் நாங்கள் பல வருடங்களாக வீதிகளில் போராடி வந்தோம். ஆனால், எங்களை சர்வதேசம் திரும்பிப் பார்ப்பதில்லை.

எங்களுக்கு விரைவில் தீர்வொன்று கிடைக்கும் என்று ஜெனிவா பேச்சுவார்த்தையின்போது கூறினார்கள். எனினும், இலங்கையில் எவரும் காணாமல் போகவில்லையெனவும் காணாமல் போனவர்கள் என கூறப்படுகின்றவர்கள் வெளிநாடுகளில் இருக்கிறார்கள் எனவும் சிங்களத் தலைவர்கள் தெரிவிக்கிறார்கள். அவ்வாறானால் வெளிநாடுகளிலுள்ள உறவுகளை அரசாங்கம் எங்களிடம் ஒப்படைக்க வேண்டும். அரசாங்கத்திடமுள்ள எமது பிள்ளைகளை மீட்கவே நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பிரச்சினைகளுக்கு மத்தியில் நாங்கள் போராட முடியாது. அதனால், வீடுகளிலிருந்து தாய்மார் அழுதுகொண்டிருக்கிறார்கள். எனினும் நாங்கள் தொடர்ந்தும் குரல் கொடுப்போம். எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

நீதிக்காக நாங்கள் போராடி வருகிறோம். எங்கள் பிள்ளைகளை எங்களிடம் மீண்டும் ஒப்படையுங்கள். அல்லது என்ன நடந்தது என்று கூறுங்கள். அதுவரை எமது போராட்டம் தொடர்ந்துகொண்டே இருக்குமென்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வவுனியாவில் ஐவர் கொரோனாவுக்கு பலி

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த மேலும் இருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதுடன், கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆக உயர்வடைந்துள்ளதென சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனா தொற்று காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இருவர் உயிரிழந்துள்ளனர். வவுனியா, மதீனா நகர்ப் பகுதியைச் சேர்ந்த 63 வயது ஆண் ஒருவரும், நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த 56 வயது ஆண் ஒருவருமே இவ்வாறு மரணமடைந்தவர்களாவர்.

இது தவிர, முன்னதாக இரணை இலுப்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரும், நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த ஆண் ஒருவரும், வவுனியா நகரப் பகுதியைச் சேர்ந்த ஆண் ஒருவரும் என மூவர் உயிரிழந்துள்ளனர்.

# கிளிநொச்சியில் சட்டவிரோத மணல் அகழ்வால் வயல் நிலங்களை இழக்கும் விவசாயிகள்

(மு. தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்ற சட்டவிரோத மணல் அகழ்வினால் தங்களுடைய வயல் காணிகளையும் இழந்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மழையை நம்பி ஒரு போகம் விதைப்பில் ஈடுபடுகின்ற விவசாயிகளின் வயல் நிலங்களில் சட்டவிரோதமாக பாரியளவிலான குழிகள் வெட்டப்பட்டு மணல் அகழ்வுகள் இடம்பெறுகின்றமையால் குறித்த காணிகளை விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

கரைச்சியில் ஊற்றுப்புலம், சிவநகர், பன்னங்கண்டி, உமையாள்புரம், தட்டுவன் கொட்டி, கண்டாவளையில் பெரியகுளம், கண்டாவளை, நாகேந்திரபுரம், கல்லாறு, போன்ற பிரதேசங்களில் இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வினால் வயல் நிலங்களை விவசாயிகள் இழக்க நேரிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ், இராணுவம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி களின் கவனத்துக்கு பல தடவைகள் கொண்டுசென்றபோதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கும் விவசாயிகள், சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்களை தங்களால் தடுக்க முடியாதுள்ளதாகவும் மீறி தடுத்தால் அல்லது தட்டிக்கேட்டால் வாள் வெட்டுக்கு இலக்காக நேரிடுகிறது என்றும் கூறுகின்றனர்.

எனவே, மாவட்டத்தின் எதிர்காலம் கருதி பொறுப்புவாய்ந்த அனைத்து தரப்பினர்களும் ஒன்றிணைந்து அதிகரித்துள்ள சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கண்டியில் மருந்துக் களஞ்சியம் அதிரடி சுற்றிவளைப்பு

## ஒருதொகை போதை வில்லைகளுடன் ஒருவர் கைது

கண்டி, அம்பிட்டிய பிரதேசத்தில் போதை வில்லைகள் உள்ளிட்ட ஒருதொகை சட்டவிரோத மருந்து வில்லைகளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் கண்டி பொலிஸ் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது மருந்துக் களஞ்சியசாலையொன்று பரிசோதிக்கப்பட்டுள்ளது. இதன்போதே



இந்த மருந்துப்பொருட்களுடன் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது ஒரு இலட்சத்து 30 ஆயிரம் போதை வில்லைகள் மற்றும் மேலும் 4 ஆயிரத்து 500 மருந்து வில்லைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

உடுகம, அம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாத்திரைகளுடன் சந்தேகநபரை கண்டி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஆப்கானிலிருந்து 66 இலங்கையர்கள் வெளியேற்றம்

ஆப்கானிஸ்தானில் தங்கியிருந்த 66 இலங்கையர்கள் வெளியேற்றப் பட்டுள்ளதாகவும் மேலும் 21 பேர் அங்கேயே தங்கியிருக்க விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

மனிதாபிமான எதிர்பார்ப்புகள் உள்ளடங்கலாக ஆப்கானிஸ்தானில் நிலவும் முன்னேற்றங்கள் குறித்து இலங்கை தொடர்ந்தும் அவதானித்து வருவதுடன், அங்கு நிலவும் நிலைமைகள் குறித்து அக்கறையுடன் செயற்படுகின்றது.

சர்வதேச பங்குதாரர்களின் உதவியுடன், ஆப்கானிஸ்தானிலிருந்து தனது பிரஜைகளை வெளியேற்றுவதில் இலங்கை உதவிகளை வழங்கி வருகின்றது. நேற்று முன்தினம் வரை அறுபத்தாறு இலங்கையர்கள் வெளியேற்றப்பட்டிருப்பதுடன், ஏழு பேர் வெளியேற்றப்படவுள்ள அதேநேரத்தில், இருபத்தியொரு இலங்கையர்கள் ஆப்கானிஸ்தானில் தங்கியிருப்பதற்குத் தீர்மானித்துள்ளனர்.

ஏனைய நாடுகளிலிருந்து பயண அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டுள்ள அனைவரும் ஆப்கானிஸ்தானுக்கு வெளியே பயணங்களை மேற்கொள் வதற்கு பாதுகாப்பான மற்றும் ஒழுங்கான முறையில் அனுமதிக்கப்படும் என எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளது.

## கைக்குண்டு - துப்பாக்கிகளுடன் நபரொருவர் கைது


ரம்புக்கனை, எத்வடேவத்த பிரதேசத்தில் பயன்படுத்தப்படாத கைக்குண்டு, துப்பாக்கி மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட எத்வடேவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் கேகாலை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெ டுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவிக்கையில்,

சுற்றிவளைப்பின்போது சந்தேகநபரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பயன்படுத்தப்படாத கைக்குண்டு, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 03 ரிவோல்வர் துப்பாக்கிகள், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 02 கல்கடஸ் துப்பாக்கிகள், 02 கைவிலங்குகள், பயன்படுத்தப்படாத 22 தோட்டாக்கள் மற்றும் 01 கிராம் 330 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் கேகாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார். அத்வடேவத்த, ரம்புக்கென்ன பிரதேசத்தைச் சேர்ந்த



37 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சந்தேகநபரை கேகாலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் கேகாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

# குற்றம் தவிர்

Police Roundup

தொகுப்பு: நா.தினுஷா

## போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

### பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிவலீபுர பிரதேசத்தில் பொரளை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சிவலீபுர பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பொரளை பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய அந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிசிர உயன மற்றும் ராஜகருணா மாவத்தை ஆகிய பிரதேசங்களில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட இருவேறு சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது 05 கிராம் 550 மில்லிகிராம் மற்றும் 06 கிராம் 700 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொரளை மற்றும் கொழும்பு 10 ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 26 மற்றும் 46 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

### பேலியகொடை

பேலியகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவலோக்க சுற்றுவட்டாரத்துக்கு அருகில் நேற்று முன்தினம் மேல்மாகாண வடக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 10 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 14ஐச் சேர்ந்த 47 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### தெஹிவளை

தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புகையிரத நிலையத்துக்கு அருகில் தெஹிவளை பொலிஸ் அதிகாரிகளினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 775 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அவ்வெல்சாவிய பிரதேசத்தில் கிராண்ட்பாஸ் பொலிஸ் அதிகாரிகளினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின்போது 02 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மாளிகாவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒருகொடவத்த மற்றும் கம்பிகொட்டுவ ஆகிய பிரதேசங்களில் கிராண்ட்பாஸ் பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட இருவேறு சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது 05 கிராம் 725 மில்லிகிராம் மற்றும் 05 கிராம் 412 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் மேலும் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மீதொட்டுமுல்லை, வெல்லம்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 29 வயதுடைய பெண் ஒருவரும் வெஹெரகொடெல்ல, வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் கைது

### லக்கல

லக்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரம்புக்ஒலுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் லக்கல பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது துப்பாக்கியொன்றை வைத்திருந்தமை மற்றும் தேவையின்றி காட்டுப்பகுதிக்குள் நுழைந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹீரட்டிஓயா, புதிய லக்கல பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### பொத்துவில்

பொத்துவில், கச்சிக்குடி பிரதேசத்தில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படை ஷாஸ்தரவெல முகாம் மற்றும் விசேட அதிரடிப்படை லாஹுகல முகாம் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது காட்டுப்பகுதிக்குள் தேவையின் பிரவேசித்த சந்தேகநபர்கள் இருவர் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் 02 வெற்று தோட்டாக்களுடன் கைதுசெய்யப்பட்டு லாஹுகல வனஜீவராசிகள் காரியாலய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சேங்கமவ மற்றும் பொத்துவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 42 மற்றும் 45 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேகநபர்கள் கைது

### ஜா- எல

ஜா-எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏக்கல பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஜா-எல பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 80 போத்தல்களில் சட்டவிரோத மதுபானத்தை முச்சக்கரவண்டியில் எடுத்துச்சென்றுகொண்டிருந்த சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கனேமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### பூகொட

பூகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜமன்னவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் பூகொட விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளினால் மன்னவத்த பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 33 மில்லிலீற்றர் சட்டவிரோத மதுபானம் 750 போத்தல்களுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு பூகொட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கஹதகொட பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## வீதி விபத்தில் ஒருவர் பலி

### வாழைச்சேனை

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரிதிதென்ன கூலாவாடி வீதியில் கூலாவாடி சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் ரிதீதென்னையை நோக்கி பயணித்த ட்ரெக்டர் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியிலிருந்து விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான ட்ரெக்டர் வாகனத்தின் சாரதி வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

கொவிபல வீதி, ஓமினியாமடு பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## மோட்டார் சைக்கிளை திருடிய ஒருவர் கைது

### ராகம

ராகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட படுவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படை புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது மோட்டார் சைக்கிள் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பவற்றை திருடிச்சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய கடவத்த பொலிஸாரால் தேடப்பட்டுவந்த சந்தேகநபரொருவர் திருடப்பட்ட பொருட்களுடன் கைதுசெய்யப்பட்டு கடவத்த பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கனேமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்பனைசெய்தவர் கைது

### குருந்துவத்த

குருந்துவத்த, டொரின்டன் மாவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படை திட்டமிட்ட குற்றச்செயல்கள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது அனுமதிப்பத்திரமின்றி 20 சாராய போத்தல்களுடன் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டு குருந்துவத்த பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட நபர்கள் கைது

### கல்கிரியாகம

கல்கிரியாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரலவ, பொத்தான பிரதேசத்தில் தம்புள்ளை விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது தம்புலு ஓயா பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்ந்து ட்ரெக்டர் வாகனத்தில் ஏற்றிக்கொண்டிருந்த நபரொருவர் கைதுசெய்யப்பட்டு கல்கிரியாகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மடாடுகம பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இதேவேளை, கல்கிரியாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரலவ, பொத்தான பிரதேசத்தில் நேற்று முன்தினம் தமபுள்ளை விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது தம்புலு ஓயாவில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்ந்துகொண்டிருந்த மேலும் ஒருவர் கைதுசெய்யப்பட்டு கல்கிரியாகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கிரலவ, பும்போகம பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# கல்முனை பிராந்தியத்தில் மூன்று வாரங்களில் கொவிட் மரண விகிதத்தை பூச்சியத்திற்கு கொண்டுவருவோம்

## சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் சுகுணன் நம்பிக்கை


கல்முனை சுகாதார சேவைகள் பிராந்தியத்தில் முதலாவது தடுப்பூசி ஏற்றும் பணிகள் 93 சதவிகிதத்தை தாண்டியுள்ளதாகவும், இன்னும் மூன்று வாரங்களில் கல்முனை பிராந்தியத்தில் கொரோனா மரணங்களை பூச்சியத்திற்கு கொண்டுவருவோம் எனவும் கல்முனை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் டாக்டர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

இந்நிலையில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதிக்குட்பட்ட கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு பிரதேசங்களில் இரண்டாவது தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் கல்முனை சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் குணசிங்கம் சுகுணனின் நெறிப்படுத்தலில் நேற்றுமுதல் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்ப பிராந்தியத்தில் பொதுமக்கள் தமக்குரிய நாட்களில் தங்களது தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுங்கள். இன்னும் மூன்று வாரங்களில் நாம் கல்முனை பிராந்தியத்தில் கொவிட்-19 மரணங்களை பூச்சியத்திற்கு கொண்டுவருவோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அதிகார எல்லைக்குட்பட்ட பதின்மூன்று சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கமைவாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுமார் 30 ஆயிரம் பேருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கைகள், கல்முனை சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் குணசிங்கம் சுகுணனின் நெறிப்படுத்தலில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.அகிலன் தலைமையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.






இதேவேளை, நோய் நிலைமையில் நடமாட முடியாத வயோதிபர்கள், விசேட தேவையுடையோர் போன்றோருக்காக நடமாடும் தடுப்பூசி செலுத்தும் செயற்றிட்டமும் இப்பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நடமாடும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மூலம் சம்பந்தப்பட்ட அறுபது வயதிற்கு மேற்பட்ட வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் போன்றோர் நன்மையடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருகோணமலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோருக்கு உலருணவுப் பொதிகள் வீடுகளுக்குச்சென்று வழங்கிவைப்பு





(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் கொவிட் தொற்று காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்படுகின்றன.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரளவின் ஏற்பாட்டில் ஊரடங்கு காலத்தில் நோயாளிகள் மற்றும் வயோதிபர்கள், தனிமைப்படுத்தலில் இருப்போர் போன்றோருக்கு உலருணவுப் பொதிகள் தேடிச்சென்று வழங்கப்பட்டு வருகின்றன.

நாடாளுமன்ற உறுப்பினரால் திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் இவ்வாறு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் ஆதரவற்றோர் பலர் இருப்பதாக அறிந்தே இவ்வாறான செயற்பாட்டை முன்னெடுப்பதாகவும் மேலும், மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடனும் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

# இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு ஏறாவூரில் 1,813 பேருக்கு கையளிப்பு



(ஏறாவூர் நிருபர் நாஸர்)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தினால் ஏறாவூர் பிரதேசத்தில் வாழ்வாதாரத்தை இழந்துள்ள ஆறாயிரத்து 44 பேருக்கு அரசாங்கத்தின் கொடுப்பனவு வழங்கும் திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக ஆயிரத்து 813 பேருக்கு இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் ஏறாவூர் மிச்நகர் கிராமசேவகர் பிரிவிலுள்ள 425 பேருக்கு வீடுவீடாகச் சென்று கொடுப்பனவை வழங்கும் நடவடிக்கை நேற்று பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத் தலைமையில் நடைபெற்றது.

கிராமசேவை அதிகாரி மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.

# திருக்கோவிலில் வீதிகளில் நடமாடிய 85 பேருக்கு அன்ரிஜன் பரிசோதனை; 8 பேருக்கு கொரோனா

(கனகராசா சரவணன்)

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் ஊரடங்கு அமுலிலுள்ள நேரத்தில் அநாவசியமாக வீதிகளில் நடமாடிய 85 பேரை நேற்று முன்தினம் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பொலிஸாருடன் இணைந்து மடக்கிப்பிடித்து அன்ரிஜன் பரிசோதனை மேற்கொண்டதில் 8 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பி.மோகனகாந்தன் தெரிவித்தார்.

நாட்டில் ஊரடங்கு தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், சட்டத்தை மீறி திருக்கோவில் பிரதேசத்தில் பொதுமக்கள் அநாவசியமாக வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் நடமாடி வருகின்றனர்.

இந்தச் சட்டத்தை மீறி வீதிகளில் நடமாடுபவர்களை பொலிஸாருடன் இணைந்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பிடித்து வீதிகளில் வைத்து அன்ரிஜன் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இவ்வாறு அநாவசியமாக வீதிகளில் நடமாடியவர்கள் பிடிக்கப்பட்டு அவர்களுக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொண்டதில் 8 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

# பெரியநீலாவணையில் இரண்டாம் கட்ட தடுப்பூசி







(பெரியநீலாவணை நிருபர்)

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய பிரிவில் முதலாவது தடுப்பூசியை ஏற்றிக்கொண்ட 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இரண்டாவது டோஸ் தடுப்பூசியை செலுத்தும் பணிகள் நேற்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

பெரியநீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலயத்தில் பொதுமக்கள் நீண்ட வரிசையில் ஆர்வத்துடன் வருகை தந்து சினோபார்ம் இரண்டாவது டோஸ் தடுப்பூசியை பெற்றுக்கொண்டனர்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ளபோதும் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி மக்கள் ஆர்வத்துடன் தமது தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வருகை தந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் எதிர்வரும் வியாழக்கிழமை வரைக்கும் இரண்டாவது டோஸ் தடுப்பூசி ஏற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ள விசேட நிலையங்களில் இந்த தடுப்பூசி ஏற்றும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெறவுள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

# ஓட்டமாவடியில் இதுவரை 2,327 சடலங்கள் அடக்கம்!

ஓட்டமாவடியில், கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்த இரண்டாயிரத்து 327 பேரின் உடல்கள் இதுவரை அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

கொரோனா தொற்று காரணமாக உயிரிழக்கும் சடலங்கள் கிழக்கு மாகாணம் ஓட்டமாவடியிலுள்ள சூடுபத்தினசேனையில் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் நேற்று முன்தினம் மாத்திரம் முஸ்லிம்கள் – 26, இந்துக்கள் – 04, பௌத்தர்- ஒருவர் என 31 உடல்கள் அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதையடுத்து நேற்று முன்தினம் வரை அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ள கொவிட்-19 சடலங்களின் மொத்த எண்ணிக்கை இரண்டாயிரத்து 327 ஆக அதிகரித்துள்ளது.

# திருகோணமலை பகுதியில் யானை தாக்கி சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் பலி

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூட்டிகுளம் பகுதியில் காட்டு யானையின் தாக்குதலில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான என்.வீரவர்தன (48 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, அவரது வீட்டுக்குப் பின்னாலுள்ள காட்டுப்பகுதிக்கு குடிசைக்கு தேவையான தடிகளை வெட்டுவதற்காக சென்று மீண்டும் வீடு திரும்பியபோது யானை துரத்திக் கொண்டுவந்து தாக்கியதாகவும் அயலவர்கள் தெரிவித்தனர்.

குறித்த யானையின் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில், அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது அவர் உயிரிழந்துள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த குறித்த சிவில் பாதுகாப்புப் படைவீரரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டு, மரண விசாரணை முடிவுற்ற பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கோமரங்கடவல பொலிஸார் தெரிவித்தனர்.

# ஊரடங்குச் சட்டத்தை சாதகமாக பயன்படுத்தி அட்டாளைச்சேனையில் சட்டவிரோத மண் அகழ்வு

(ஒலுவில் நிருபர்)

அட்டாளைச்சேனை கடற்கரை பிரதேசத்தில் தற்போதைய தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை சாதகமாக பயன்படுத்தி இனந்தெரியாதவர்கள் கடல் மண் அகழ்வதாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளதால் பொதுமக்கள் மற்றும் மீனவர்களின் நடமாற்றம் குறைவாகவுள்ளதை சாதகமாக பயன்படுத்தி, நள்ளிரவு 12 மணியிலிருந்து அதிகாலை 4 மணிக்குள் கடல் மண் அகழ்வை மேற்கொள்வதாகவும், சிறு உழவு இயந்திரம் மூலமாகவும் அது தவறும் பட்சத்தில் உரப்பைகளில் மண்ணை அடைத்து ஒவ்வொன்றாக மோட்டார் சைக்கிள் மற்றும் மேற்குறிப்பிட்ட வாகனங்களிலும் கொண்டுசென்று அதிகமான விலைக்கு விற்பனை செய்வதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு சட்டவிரோதமாக மண் அகழ்வோர் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கின்ற சந்தர்ப்பத்தில் அல்லது எதிர்பாராதவிதமாக பொலிஸார் வருகின்றபோது சம்பந்தப்பட்டவர்களினால் அங்காங்கே நிறுத்திவைக்கப்பட்டவர்கள் தகவல்



வழங்குகின்றபோது பொலிஸார் வருவதற்கு முன்னராக மண் அகழும் இடத்தை விட்டு தலைமறைவாகி விடுகின்றனர்.

இதனை நேரடியாக சென்று தடுப்பதற்கு அச்சப்படுவதாகவும் அதனால் சம்பந்தப்பட்டவர்களிடம் மறைமுகமான தகவல்களை வழங்கியும் எந்த பிரயோசனமும் இல்லை எனவும் மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் கவனமெடுத்து, இரகசியமான முறையில் இவர்களை அவதானித்து நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அம்பாறை மாவட்டத்தில் ஆறு பிரதேசங்களில் இன்று குடிநீர் வெட்டு

(ஒலுவில் நிருபர்)

அம்பாறை கொண்டுவட்டுவான் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் திருத்த வேலைகள் இடம்பெற இருப்பதால் 6 பிரதேசங்களுக்கான குடிநீர் வழங்கல் இன்று செவ்வாய்க்கிழமை தடைப்படும் என தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் அக்கரைப்பற்று நிலையப் பொறுப்பதிகாரியினால் அறிவிக்கப்பட்டது..

இதற்கமைவாக, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை மற்றும் இறக்காமம், தமனை போன்ற பிரதேசங்களில் காலை 6 மணிமுதல் மாலை 5 மணிவரை நீர் வழங்கல் முற்றாக தடைப்பட்டிருக்கும் எனவும் பாவனைக்குரிய நீரை சேமித்துக்கொள்ளுமாறும் பாவனையாளர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



# ஆப்கானில் அமெ. வான்படை தாக்குதலில் 3 சிறுவர்கள் பலி!



ஆப்கானிஸ்தானில் அமெரிக்க வான்படையினர் நடத்திய தாக்குதலில் சிறுவர்கள் மூவர் உள்ளிட்ட சிவிலியன்கள் சிலர் கொல்லப்பட்டிருக்கலாம் என சர்வதேச தன்னார்வ அமைப்புகள் தெரிவித்துள்ளன.


அந்நாட்டு ஊடகங்கள் வெளியிட்டுள்ள தகவல்களின் பிரகாரம், ஆறு சிவிலியன்கள் கொல்லப்பட்டதாகவும் அதில் சிறுவர்கள் மூவர் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெவ்வேறு இடங்களில் தற்கொலை குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ள தயாராகவிருந்த பயங்கரவாதிகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. காபூல் விமான நிலையத்தில் மற்றுமொரு தாக்குதலை நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டிருந்ததாகவும் இதனைத் தடுப்பதற்காகவே அமெரிக்கா வான் தாக்குதலை மேற்கொண்டதாகவும் அமெரிக்க கூட்டுப் படைகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், எதிர்வரும் 24 முதல் 36 மணிநேரத்துக்குள் ஆப்கானிஸ்தானில் தாக்குதலை மேற்கொள்ளவுள்ளதாக அமெரிக்கப் படையின் உயர் அதிகாரிகள் தனக்கு அறிவித்ததாக ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, தாக்குதல் நடத்துவதற்கு முன்னர் எச்சரிக்கை விடுக்கவேண்டுமென தலிபான்களின் பேச்சாளர் ஸபிஹுல்லாஹ் முஜாஹிட் தெரிவித்துள்ளார். அத்துடன், ஐ.எஸ். தீவிரவாதிகள் மீதான தாக்குதலை வரவேற்பதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், போர்ச் சூழலை அமெரிக்காவே விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.


## ஜெஸியின் 'புதிய அத்தியாயம்'



இங்கிலாந்தின் மிகப் பிரபலமான பாடகியும் மொடல் அழகியுமான ஜெஸி நெல்சன், தனது வாழ்க்கையில் புதிய அத்தியாயம் தொடங்கப்போவதாக அறிவித்துள்ளார். இசைத்துறையில் தனித்துவத்தைப் பேணும் ஜெஸி, இளைஞர்கள் மத்தியில் அண்மைக்காலமாக பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளார். லிட்டில் மிக்ஸ் என்ற இசைக்குழுவை நிறுவி குழு இசையை மேலும் பலப்படுத்திவந்தார் ஜெஸி.

இந்நிலையில், அவர் தனி அல்பமொன்றை உருவாக்கியுள்ளார். அதற்கென பிரத்தியேக படப்பிடிப்பு களையும் மேற்கொண்டுள்ளார். தன்னுடைய கவர்ச்சிகரமான உடல்வாகுவால் அனைவரின் மனதையும் கொள்ளை கொண்டுள்ள ஜெஸியின் புதிய பாடலை ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர்.

## குருதிக் கொடையாளிக்கு கிடைத்தது ஓய்வு



பிரித்தானியாவில் 22 முறை குருதிக் கொடை செய்து 88 நாய்களின் உயிரைக் காப்பாற்ற உதவிய க்ரேஹௌண்ட் வகை நாய் ஒன்று ஆறு ஆண்டுகளுக்குப் பின்பு குருதிக் கொடை வழங்குவதிலிருந்து ஓய்வுபெற்றுள்ளது.

பிரிட்டனிலுள்ள லேஸ்சர்ஷர் நகரைச் சேர்ந்த வூட்டி எனும் இந்த க்ரேஹௌண்ட் வகை நாய் தமது மூன்றே முக்கால் வயதில் குருதிக் கொடை செய்யத் தொடங்கியது.

"மோசமான மனவருத்தம் தரக்கூடிய சூழல்களில் அந்த குடும்பங்களுக்கு உதவுவது மிகவும் அற்புதமானது" என்று இந்த நாயின் உரிமையாளரான வெண்டி க்ரே எனும் பெண்மணி தெரிவித்துள்ளார்.

செல்லப் பிராணிகளுக்கான இரத்த வங்கிகள் நடத்தும் பெட் ப்ளட் பேங்க் யூ.கே எனும் தன்னார்வ அமைப்பு, ஒரு நாயின் உடலிலிருந்து ஒரு முறை 450 மில்லி இரத்தம் எடுக்கப்பட்டால் அதன்மூலம் நான்கு நாய்களின் சிகிச்சைக்கு உதவ முடியும் என்று குறிப்பிட்டுள்ளது.

"இத்தனை நாய்களைக் காப்பாற்றிய வூட்டி நாய் ஒரு சூப்பர் ஸ்டார்" என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

க்ரேஹௌண்ட் வகை நாய்களின் இரத்தம் பெரும்பாலும் நெகட்டிவ் ஆக இருப்பதால் இந்த வகை நாய்களின் இரத்தத்துக்கு பெரும்பாலும் தட்டுப்பாடு இருப்பதாக கூறியுள்ளதுடன், இந்த இரத்தத்தை அவசர காலங்களில் எந்த நாய்க்கு வேண்டுமானாலும் உடலில் செலுத்தலாம் என்றும் தெரிவித்துள்ளது பெட் ப்ளட் பேங்க் யூ.கே.

இதேவேளை, ஒரு வயது முதல் எட்டு வயதுக்குட்பட்ட நாய்களின் உடலிலிருந்து மட்டுமே இரத்தம் எடுக்க முடியும் என்பதால் தற்போது எட்டு வயதைக் கடந்து வூட்டியால் மேலதிகமாக குருதிக் கொடை செய்ய முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யேமனில் கிளர்ச்சியாளர்கள் வான்வழித் தாக்குதல்: 30 இராணுவத்தினர் பலி; 65 பேர் காயம்



மத்திய கிழக்கு நாடான யேமனில் இராணுவத் தளம் மீது ஏவுகணை மற்றும் ட்ரோன் ஆகியவை வாயிலாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 30 பேர் பலியானதுடன், 65இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

யேமன் இராணுவ செய்தி தொடர்பாளர் முகமது அல் நயீப் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது,

யேமனில் கடந்த சில ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடக்கிறது. லஜ் மாகாணத்திலுள்ள அல் - அனத் விமானப்படைத் தளத்தின் மீது ஏவுகணை மற்றும் ட்ரோன் வாயிலாக கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். இதில் 30 வீரர்கள் உயிரிழந்தனர். மேலும் காயமடைந்த 65 பேர் மீட்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

யேமனில் பட்டினியால் பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழக்கக்கூடும் என சர்வதேச அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், கிளர்ச்சியாளர்களால் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

உலக செய்திகள்



பொஸ்னியாவில் ஆண்டுதோறும் நடைபெறும் சாகச விளையாட்டுப் போட்டியின் ஓரங்கமாக மிக உயரமான பகுதியிலிருந்து பயிற்சியில் ஈடுபடும் அமெரிக்க வீரரை படத்தில் காணலாம்.



பிரேஸிலில் பழங்குடியினருக்கு உரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி அந்நாட்டு பாரம்பரிய உடைகளைத் தரித்தவண்ணம் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



நேபாளம், லலிட்பூரில் இடம்பெற்ற நரசிம்மா உற்சவத்தில் கலந்துகொண்ட சிறுமியரை படத்தில் காணலாம்.



காசாவில் வலது குறைந்தோருக்கு நடத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப் போட்டியின்போது போட்டியாளர் ஒருவர் சக போட்டியாளருக்கு உதவுவதை படத்தில் காணலாம். காசாவில் சுமார் 50 ஆயிரம் பேர் யுத்தத்தினால் ஏதேனும் ஓர் அங்கத்தை இழந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.



ஹெய்ட்டியில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தின் பின்னர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் உணவின்றித் தவிக்கிறார்கள். இந்நிலையில், முகாமொன்றுக்கு உணவுவகைகளை ஏற்றிவந்த கொள்கலனை முற்றுகையிட்ட மக்களை படத்தில் காணலாம்.

# இந்தியாவில் பண்டிகைகளால் அதிகரிக்கும் தொற்று; கொரோனா கட்டுப்பாடுகள் மேலும் ஒரு மாதம் நீடிப்பு

இந்தியாவில் ஒரு நாள் கொரோனா பாதிப்பு 40 ஆயிரத்தை தாண்டிய நிலையில், கொரோனா கட்டுப்பாடுகளை மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்துள்ளது மத்திய அரசு.

இந்தியாவில் இரண்டாம் அலை கொரோனா பரவல் கட்டுக்குள் வந்த நிலையில், பண்டிகைக் கொண்டாட்டங்களால் ஒரு சில மாநிலங்களில் நோய்த் தொற்றுப் பரவல் மீண்டும் வேகமெடுத்துள்ளது. இதனைத் தவிர்க்கும் வகையில் கொரோனா கட்டுப்பாடுகளை மேலும் ஒரு மாதத்துக்கு அதாவது, எதிர்வரும் செப்டெம்பர் 30ஆம் திகதிவரை நீடித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும் கொரோனா பரவல் தொடர்பாக சில அறிவுறுத்தல்களையும் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

குறிப்பாக, கேரளாவில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வரை 12 ஆயிரம் என்ற அளவில்தான் தினசரி கொரோனா பாதிப்பு இருந்தது. இதனிடையே இந்த எண்ணிக்கை 20 ஆயிரம் என்ற அளவில் இருந்துவந்தது. ஆனால், திடீரென இந்தப் பாதிப்பின் அளவு 31 ஆயிரம் ஆக அதிகரித்திருக்கிறது. இந்தளவுக்கு கொரோனா பாதிப்பு கேரளாவில் அதிகரிக்க ஓணம் பண்டிகை முக்கிய காரணமாக மாறியிருக்கிறது. எதிர்வரும் நாட்களில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கலாமென மாநில சுகாதாரத்துறையினரும் கவலை தெரிவித்துள்ளனர். அங்கு கடந்த 5 நாட்களில் மட்டும் புதிதாக ஒன்றரை இலட்சம் பேருக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது,

மாநில அரசுகளுக்கு மத்திய அரசு புதிய கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை அனுப்பியுள்ளது. அதில் ஒருசில மாநிலங்களில் உள்ளூர் பரவலை தவிர்த்து தேசிய அளவில் கொரோனா கட்டுக்குள் இருப்பதாக மத்திய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் மக்கள் கூட்டமாக கூடுவதை தவிர்க்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஒருசில மாவட்டங்களில் மட்டும் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதும், பரிசோதனையில் பாசிட்டிவிட்டி கூடுதலாக இருப்பதும் கவலையளிப்பதாக கூறப்பட்டுள்ளது.



# இலங்கையின் தங்க மகன் தினேஷ் பிரியந்த ஹேரத்






## சமித்த துலானுக்கு வெண்கலம்

டோக்கியோ 2020 பராலிம்பிக்கில் ஆண்கள் ஈட்டி எறிதல் - F46 போட்டியில் இலங்கை வீரர் தினேஷ் பிரியந்த ஹேரத் புதிய உலக சாதனை படைத்தார். ஆண்கள் ஈட்டி எறிதல் - F46 இறுதிப் போட்டியில் 67.79 மீற்றர் தூரத்தைக் கடந்து தினேஷ் பிரியந்த தங்கம் வென்றதுடன், F64 ஈட்டி எறிதல் போட்டியில் கலந்துகொண்ட இலங்கை வீரர் சமித்த துலான் கொடித்துவக்கு 65.61 மீற்றர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து வெண்கலப்பதக்கத்தையும் வென்றுள்ளார்.

பராலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்ற முதல் இலங்கையர் என்ற பெருமையைப் பெற்றார். இந்தியாவின் தேவேந்திர ஜஜாரியா 64.35 மீற்றர் எறிதலுடன் வெள்ளி வென்றார், இந்தியாவின் சுந்தர் சிங் குர்ஜார் 64.01 மீற்றர் எறிதலுடன் வெண்கலம் வென்றார்.

2016ஆம் ஆண்டு ரியோவில் நடந்த பராலிம்பிக்கில் இந்தியாவின் தேவேந்திர ஜஜாரியாவின் 63.97 மீற்றர் உலக சாதனையை இலங்கையின் தினேஷ் பிரியந்த இப்போது முறியடித்துள்ளார்.

2020 பராலிம்பிக்கில் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை அணியின் கொடியை தாங்கிச் சென்ற கப்டன் தினேஷ் பிரியந்த, ரியோவில் 2016 பராலிம்பிக்கில் ஆண்கள் ஜல்லிக்கட்டு எவ்46 இறுதிப் போட்டியில் 3ஆவது இடத்தைப் பிடித்தார். 2017 உலக பரா தடகள சம்பியன்ஷிப் போட்டியில் ஈட்டி எறிதலில் வெள்ளிப் பதக்கம் வென்றார். உலக பரா தடகள சம்பியன்ஷிப்பில் வெள்ளிப் பதக்கம் வென்ற முதல் இலங்கையர் இவர்.

2018 ஆசிய பரா விளையாட்டுப் போட்டிகளில், ஆண்களுக்கான எவ்46 ஈட்டி எறிதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தினேஷ் பிரியந்த, 61.84 மீற்றர் எறிந்து புதிய ஆசிய பரா விளையாட்டு சாதனையை படைத்தார். அவர் 2019 உலக பரா தடகள சம்பியன்ஷிப் போட்டியில் ஆண்கள் 46 பிரிவில் 60.59 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

இதேவேளை, தங்கம் வென்ற தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு இராணுவ வொரன்ட் அலுவலர் (தரம் 1) பதவிக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

16வது கோடைக்கால பராலிம்பிக் விளையாட்டு போட்டிகள் 2020
SRI LANKA
ஈடிணையற்ற சாதனைக்கான வலுவூட்டல்
Dialog

# உலக சாதனை படைத்த ஸ்டூவர்ட் பின்னி ஓய்வு



சர்வதேச கிரிக்கெட் மற்றும் முதல் தர கிரிக்கெட்டுகளிலிருந்து ஓய்வு பெறுவதாக முன்னாள் இந்திய சகலதுறை வீரர் ஸ்டூவர்ட் பின்னி அறிவித்துள்ளார்.

ஸ்டூவர்ட் பின்னி இந்திய அணிக்காக 2014-16ஆம் ஆண்டுகளுக்கிடையே 6 டெஸ்ட் போட்டிகள், 14 ஒருநாள் சர்வதேச போட்டிகள், 3 ரி-20 சர்வதேச போட்டிகளில் ஆடியுள்ளார். 1983 உலகக்கிண்ணம் வென்ற இந்திய கிரிக்கெட் அணியில் விளையாடிய ராஜர் பின்னியின் மகனான ஸ்டூவர்ட் பின்னிக்கு வயது 37. டெஸ்ட் கிரிக்கெட்டில் 194 ஓட்டங்களையும் 3 விக்கெட்டுகளையும் எடுத்துள்ளார். ஸ்டூவர்ட் பின்னி. ஒருநாள் போட்டிகளில் 230 ஓட்டங்களையும் 20 விக்கெட்டுகளையும், ரி-20யில் 24 ஓட்டங்கள் ஒரு விக்கெட்டையும் எடுத்துள்ளார்.

ஸ்டூவர்ட் பின்னியின் மறக்க முடியாத ஒரு பந்து வீச்சு எதுவென்றால் 2014இல் பங்களாதேஷுக்கு எதிராக ஒருநாள் போட்டியொன்றில் அனில் கும்ப்ளேயின் சிறந்த பந்து வீச்சு சாதனையை முறியடித்தார். 4.4 ஓவர்களில் 4 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தி பங்களாதேஷை 58 ஓட்டங்களுக்குள் முடக்கினார். இந்தப் பந்து வீச்சு உலக சாதனையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ஓபன் டென்னிஸ் இன்று ஆரம்பம்



அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி இன்று ஆரம்பமாகிறது. இதில் அதிக கிராண்ட்ஸ்லாம் வென்ற வீரர் என்ற சாதனையை படைக்கும் உத்வேகத்துடன் நம்பர் ஒன் வீரர் ஜோகோவிச் தயாராகியுள்ளார்.

ஆண்டுதோறும் அவுஸ்திரேலிய ஓபன், பிரெஞ்ச் ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் என்று 4 வகையான 'கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற டென்னிஸ் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாமான அமெரிக்க ஓபன் டென்னிஸ் திருவிழா நியூயோர்க் நகரில் இன்று தொடங்கி 12ஆம் திகதிவரை நடக்கிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இந்த ஆண்டில் ஏற்கனவே 3 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும் வாகை சூடிய நம்பர் ஒன் வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் மீது பலத்த எதிர்பார்ப்பு நிலவுகிறது. ஏனெனில், இங்கு அவர் பட்டம் வென்றால் அதிக கிராண்ட்ஸ்லாம் வென்ற வீரர் என்ற புதிய சாதனையை நிகழ்த்துவார்.

அத்துடன், 1969ஆம் ஆண்டுக்குப் பிறகு எந்தவொரு வீரரும் ஒரே ஆண்டில் 4 கிராண்ட்ஸ்லாமும் வென்றதில்லை. அந்த அரிய சாதனையை படைக்கும் வாய்ப்பும் ஜோகோவிச்சுக்கு உருவாகியுள்ளது. முதல் சுற்றில் அவர் தகுதி நிலை வீரர் டென்மார்க்கின் ஹோல்ஜர் நோட்ஸ்கோ ருனேவை எதிர்கொள்கிறார்.

ஒலிம்பிக் சம்பியனும், சமீபத்தில் சின்சினாட்டி ஓபனை வென்றவருமான அலெக்சாண்டர் ஸ்வெரேவ் (ஜேர்மனி), 2ஆம் நிலை வீரர் மெட்விடேவ் (ரஷ்யா), சிட்சிபாஸ் (கிரீஸ்), பாடிஸ்டா அகுட் (ஸ்பெயின்) ஆகியோர் ஜோகோவிச்சுக்கு கடும் சோதனையாக இருப்பார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நம்பர் ஒன் வீராங்கனை ஆஷ்லே பார்ட்டி (அவுஸ்திரேலியா), நடப்பு சம்பியன் நவோமி ஒசாகா (ஜப்பான்), அரினா சபலென்கா (பெலாரஸ்), ஸ்வியாடெக் (போலந்து), ஒலிம்பிக் சம்பியன் பெலின்டா பென்சிச் (சுவிட்ஸர்லாந்து), பியான்கா ஆன்ட்ரீஸ்கு (கனடா), சிமோனா ஹாலெப் (ருமேனியா), பிளிஸ்கோவா (செக் குடியரசு) உள்ளிட்டோர் வெற்றி வாய்ப்பில் முன்னணியில் உள்ளனர்.




# பராலிம்பிக்கில் தங்கம் வென்ற மருத்துவர்




டோக்கியோவில் நடைபெறும் பராலிம்பிக்கில் ஸ்பெயினைச் சேர்ந்த மருத்துவரான சுசானா ரொட்ரிக்ஸ், தங்கப்பதக்கம் பெற்றார். ஸ்பெயின் சார்பாக ட்ரையத்லானில் கிடைத்த முதலாவது தங்கம் இதுவாகும். உயிருடன் போராடிய கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளித்த சுசானா ரொட்ரிக்ஸ், பராலிம்பிக் போட்டியில் முதலிடம் பெற்றார்.

அல்பினிசம், கடுமையான கண் குறைபாட்டுடன் பிறந்த சுசானா ரொட்ரிக்ஸுக்கு பராலிம்பிக்கில் விளையாட வேண்டும் என்ற ஆர்வம் சிறு வயது முதலே இருந்தது. பரா ட்ரையத்லானைக் கண்டுபிடித்து, தனது புதிய விளையாட்டில் கவனம் செலுத்தினார்.






பீஜிங் 2008 பராலிம்பிக் அணியில் சுசானா ரொட்ரிக்ஸ் இடம்பெறவில்லை. அது அவருக்கு ஏமாற்றமாக இருந்தது. பயிற்சியை இடைவிடாது தொடர்ந்ததால் பல போட்டிகளில் முதலிடம் பிடித்து தெரிவாளர்களின் பார்வையை தன் பக்கம் திருப்பினார்.

சுசானா ரொட்ரிக்ஸின் திறமை அவரை உலக சம்பியன்ஷிப்புக்கு அழைத்துச் சென்றது. எட்மண்டன் 2014, சிகாகோ 2015 உலக சம்பியன்ஷிப்பில் மூன்றாம் இடத்தையும், ரோட்டர்டாமில் 2016இல் நான்காவது இடத்தையும் பிடித்தார். 2018 மற்றும் 2019 உலக சம்பியன்ஷிப் போட்டிகளிலும், 2019இல் ஸ்பெயினின் வலென்சியாவில் நடைபெற்ற ஐரோப்பிய சம்பியன்ஷிப் போட்டிகளிலும் அவர் முதலிடத்தைப் பெற்றார்.

மாரடைப்பால் பாதிக்கப்பட்ட சுசானா ரொட்ரிக்ஸ், விளையாட்டுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு மருத்துவத்தைக் கவனிக்கத் தொடங்கினார். பராலிம்பிக்கில் போட்டியிடுவதற்காக மீண்டும் விளையாட்டில் கவனம் செலுத்தத் தொடங்கினார்.

ரைம்ஸ் சஞ்சிகை சுசானா ரொட்ரிக்ஸின் படத்தை அட்டைப்படத்தில் பிரசுரித்து இவருக்கு கௌரவம் வழங்கியது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# இந்தியாவுக்கு முதல் தங்கம்




டோக்கியோ பராலிம்பிக் 10 மீ. ஏர் ரைபிள் துப்பாக்கிச் சுடுதலில் இந்திய வீராங்கனை அவனி தங்கம் வென்றுள்ளார்.

டோக்கியோ பராலிம்பிக் போட்டியில், மகளிருக்கான 10 மீ. ஏர் ரைபிள் துப்பாக்கிச் சுடுதலில் இந்திய வீராங்கனை அவனி லெகாரா தங்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார். இது பராலிம்பிக் துப்பாக்கிச் சுடுதல் வரலாற்றில் இந்தியாவுக்கு கிடைத்துள்ள முதல் தங்கம் என்பது குறிப்பிடத்தக்கது. பராலிம்பிக்கில் தங்கம் வென்ற முதல் பெண்ணும் இவர்தான்.

அவானி 249.6 புள்ளிகள் எடுத்து உலகச் சாதனை படைத்துள்ளார். சீனாவின் க்யூபிங் ஜாங் 248.9 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கமும், உக்ரைன் நாட்டின் இரினா 227.5 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கமும் வென்றுள்ளனர்.

# டோக்கியோவில் இரண்டு ஆப்கானிய பராலிம்பியன்கள்

டோக்கியோ பராலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க இரண்டு ஆப்கானிஸ்தான் விளையாட்டு வீரர்கள் தயாராகவுள்ளனர்.

டெக்வாண்டோகா வீரர் ஜாகியா குதாடாடி, ஓட்டப்பந்தய வீரர் ஹொசைன் ரசோலி ஆகியோர் பரிஸிலிருந்து ஓகஸ்ட் 28 அன்று ஜப்பானிய தலைநகருக்கு வந்ததாக அமைப்பாளர்கள் அறிவித்தனர். பராலிம்பிக்கில் ஆப்கான் வீரர்கள் எவரும் கலந்துகொள்ளாத நிலையில் இவர்களின் பங்கேற்பு மகிழ்ச்சியளிப்பதாக அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.





தனிநபர்கள், அமைப்புகள் மற்றும் அரசாங்கங்களின் உலகளாவிய ஆதரவுடன், இவர்கள் இருவரும் கடந்த வார இறுதியில் காபூலிலிருந்து பிரான்ஸுக்கு வெளியேற்றப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

புறப்படுவதற்கு 96 மணிநேரம் மற்றும் 72 மணி நேரத்திற்கு முன்பு இருவருக்கும் கொவிட் -19இற்கான இரண்டு பி.சி.ஆர் பரிசோதனைகள் செய்யப்பட்டன. ஹனெடா விமான நிலையத்தில் வந்தவுடன் மீண்டும் சோதிக்கப்பட்டனர்.

ஏதென்ஸ் 2004இற்குப் பிறகு பராலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் ஆப்கானிஸ்தானின் முதல் பெண் விளையாட்டு வீராங்கனை ஜாகியா ஆவார். செப்டெம்பர் 2ஆம் திகதி டேக்வாண்டோவில் பெண்கள் கே 44 -49 கிலோ எடைப் போட்டியில் கலந்துகொள்வார்.

சனிக்கிழமை மாலை பராலிம்பிக் கிராமத்திற்கு வந்ததும், இரண்டு விளையாட்டு வீரர்களையும் ஐ.பி.சி. தலைவர் ஆண்ட்ரூ பார்சன்ஸ், ஐ.பி.சி. தடகள கவுன்சிலின் தலைவர் செல்சி கோட்டெல் ஆகியோர் வரவேற்றனர்.

